

வருடாந்த அறிக்கை


2019



இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

உள்ளடக்கம்

- இணைப்புத் தகவல்கள் 01
- தொலைநோக்கும் பணிக்கூற்றும்.....02
- கூட்டுத்தாபனத் தகவல்கள் 03-07
- தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் அறிக்கை 08-37
- நிதியறிக்கை 38-41
  - நிதி நிலைமைக் கூற்று..... 38
  - வருமானக் கூற்று 39
  - பங்குரிமை மாற்றற் கூற்று 40
  - காசுப் பாய்ச்சற் கூற்று 41
- கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும்.....42-58
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 59-78
- கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் நிறுவனம் எடுத்த நடவடிக்கைகள் 79-92



தலைமைக் காரியாலயம்

இல. 21, மீரானிய வீதி, பீபீசீ வளாகம் கொழும்பு 12,
இலங்கை.
தொலைபேசி : 0115757539
தொலைநகல் : 011243863
மின்னஞ்சல் : slspc@sltnet.lk

பிராந்திய அலுவலகம்

பிராந்திய அலுவலகம், கல்பில்ல, பன்விலை
தொலைபேசி : 0815634903
தொலைநகல் : 0815634902
மின்னஞ்சல் : regionalofficegp@gmail.com

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை



தொலைநோக்கும் பணிக்கூற்றும்

தொலைநோக்கு

பெருந்தோட்டத் துறையில்
அரசாங்கத்திற்குச் சொந்தமான
மிகவும் பலமான வர்த்தக
முயற்சியாக விருத்திசெய்தல்.

பணிக்கூற்று

தொழிலாளர் பங்கேற்பினூடாக இலங்கை அரச
பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களை
சிறப்பாக நிர்வகித்து நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி,
பெருந்தோட்டத் தொழிலாளர் குடும்பங்கள் மற்றும் அயற்
கிராமங்களுக்கு அதிகபட்ச பங்களிப்புக்களை வழங்குதல்.

பணிப்பாளர்கள் சபை – 2019

பெயர்	**பதவி**
• திரு. எம்.ஜீ.ஜீ திலகசிறி	தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
• திரு. பெருமாள் ரமேஷ்	சபை அங்கத்தவர் / பொது முகாமையாளர்
• திரு. ஏ.ஜே.எம்.டீ.பீ.பீ அவிருப்பொல	சபை அங்கத்தவர் / (2019 பெப்ரவரி முதல் டிசம்பர் வரை)
• திருமதி. எச்.ஜீ.டீ ப்ரசங்கிகா	திறைசேரி அங்கத்தவர் (2019 மே முதல் டிசம்பர் வரை)
• திரு. ஏ லக்கதாஸ்	அமைச்சின் மேற்பார்வையாளர் (2019 ஒக்தோபர் முதல் டிசம்பர் வரை)
• திரு. டீ.ஆர்.பீ ரத்நாயக	சபை அங்கத்தவர் (2019 ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை)
• திரு. எஸ் ராஜரத்னம்	சபை அங்கத்தவர் (2019 ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை)
• திரு. ஈ.எம்.டீ.டப்.ஏ.எஸ்.கே அமுனுகம	சபை அங்கத்தவர் (2019 ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை)
• திரு. டீ.வீ.ஜீ ப்ரியங்கர	சபை அங்கத்தவர் (2019 ஜனவரிமுதல் டிசம்பர் வரை)
• திரு. டப்.கே.எம்.எம் சன்ஜீவ கெலும் பணிப்பாளர்	சபை அங்கத்தவர் (2019 ஜனவரிமுதல் டிசம்பர் வரை)

கணக்காய்வுக் குழு – 2019

பெயர்	**பதவி**
• திருமதி. எச்.ஜீ.டீ ப்ரசங்கிகா	குழுத் தலைவி , திறைசேரி
• திரு. ஏ.ஜே.எம்.டீ.பீ.பீ அவிருப்பொல	செயற்குழு உறுப்பினர்
• திரு. ஈ.எம்.டீ.டப்.ஏ.எஸ்.கே அமுனுகம	செயற்குழு உறுப்பினர்
• திரு. கே.ஏ.சீ சாமந்த பெரேரா	உள்ளகக் கணக்காய்வாளர் /குழு அங்கத்தவர் (அரச முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு)
• திரு. பீ.டீ. மனோஜ் பீ குமார	கணக்காய்வு மேற்பார்வையாளர் / மேற்பார்வை அதிகாரி (கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்)
• திரு. எச்.என்.பீ ஜினசேன	பொது முகாமையாளர், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
• திரு. எஸ்.அய்.எம் ஹஸன்	பிரதி பொது முகாமையாளர் (நிதி), இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
• திரு. ஈ.ஆர்.அய்.பீ.எஸ் சம்பத் பண்டார	உள்ளகக் கணக்காய்வு, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

முகாமைத்துவம் – பிரதான காரியாலயம் – 2019


பெயர்	**பதவி**
• திரு. எம்.ஜீ.ஜீ திலகசிறி	தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
• திரு. எச்.என்.பீ ஜினசேன	பொது முகாமையாளர்
• திரு. ஜே.எச்.அய் ஜயசுந்தர	பதில் பிரதிப் பொது முகாமையாளர் – நிர்வாகம்
• திரு. எஸ்.அய்.எம் ஹஸன்	பிரதிப் பொது முகாமையாளர் – நிதி
• திருமதி. கே.ஏ.எச்.டீ பெரேரா	முகாமையாளர் – பொது முகாமையாளர் பிரிவு *(08/07/2018-01/07/2019)*
• திரு. கே முனசிங்ஹ	முகாமையாளர் – சட்டம்
• திருமதி. கே.ஏ.எச்.டீ பெரேரா	முகாமையாளர் - பெறுகை *(01/07/2019 முதல்)*
• திரு. டப்.டீ.டப். கீர்த்தி	முகாமையாளர் – சந்தைப்படுத்தல்
• திரு. ஈ.ஆர்.அய்.பீ.எஸ்.எஸ் பண்டார	உள்ளகக் கணக்காய்வாளர் *(2018/08/01 முதல்)*
• திரு. கயான் யாபா	உதவி முகாமையாளர் - போக்குவரத்து
• செல்வி. ஜீ.டீ.எஸ்.சீ சுதசிங்ஹ	உதவி முகாமையாளர் (நிர்வாகம் / மனித வளம் – ஒப்பந்தம்)
• திரு. பீ. வீ ப்ரதீப்	உதவி முகாமையாளர் – காணிகள்
• திரு. எச்.எம்.எஸ்.என் ஹேரத்	உதவி முகாமையாளர் (சந்தைப்படுத்தல்)
• திரு. ஆர்.ஜீ.எஸ்.எச். குணதிலக	கணக்காளர்
• திரு. பீ.சீ.ஜே பனாகொட	உதவிக் கணக்காளர்
• திரு. குருப்பு	கணக்காய்வு உத்தியோகத்தர்
• திரு. எல்.டப் சிரிரத்ன	பதில் கணக்காய்வு உத்தியோகத்தர்
• திருமதி என்.எஸ் அநுராதநாயக	சட்ட உத்தியோகத்தர் *(01/10/2019-20/12/2019)*
• திரு. ஜே.பீ.சீ பொன்சேகா	நிர்வாக உத்தியோகத்தர்

முகாமைத்துவம் – பெருந்தோட்டங்கள் - 2019

பெயர்	பதவி
திரு. எஸ் டீ கொஸ்தா	பிரதிப் பொது முகாமையாளர் (தோட்டங்கள் – ஒப்பந்தம்)
திரு. ஆர். சீ கஹவிட	முகாமையாளர் (தோட்டங்கள்)
திரு. டப்.ஏ.டீ.பீ. விஜேசிங்ஹ	பதில் முகாமையாளர் (வனம்)
திருமதி. டீ மொரஹெல	உதவிக் கணக்காளர்
திரு. வய்.ஏ.டீ.பீ வடுகொடபிடிய	தோட்ட அதிகாரி – அலகொல்லை அரச தோட்டம்
திரு. எஸ். வய் லியனகே	தோட்ட அதிகாரி - கொடகங்கை அரச தோட்டம்
திரு. டீ.எம்.பீ.அய். தென்னகோன்	தோட்ட அதிகாரி – கல்பிஹில்லை அரச தோட்டம்
திரு. ஆர்.ஏ.எம் தயாரத்ன	தோட்ட அதிகாரி – கோமரை அரச தோட்டம்
திரு. ஜீ.டப்.ஜீ விஜேரத்ன	தோட்ட அதிகாரி – ஓபல்கலை அரச தோட்டம்
திரு. டீ.ஆர்.எச் ஹேவகே	தோட்ட அதிகாரி – பாகலை அரச தோட்டம்
திரு. கே.டீ.எம்.பீ வீரசிங்ஹ	தோட்ட அதிகாரி – ஹெயார்பார்க் அரச தோட்டம்
திரு. ஆர்.ஏ.ஆர்.எம் ரனவக	தோட்ட அதிகாரி – ஹுன்னஸ்கிரிய அரச தோட்டம்
திரு. பீ.அய்.எல் பெரேரா	தோட்ட அதிகாரி – கெலேபொக்கை அரச தோட்டம்
திரு. டப்.டீ.கே சமரதுங்க	தோட்ட அதிகாரி – மிட்லன்ட்ஸ் அரச தோட்டம்
திரு. ஏ.சீ அபேவர்ண	தோட்ட அதிகாரி – ரங்களை அரச தோட்டம்
திரு. அய்.டப்.ஆர் ஜயவர்தன	வலஹந்துவை அரச தோட்டம்
திரு. டீ.டப்.டீ.சீ தன்தசிங்ஹ	தோட்ட அதிகாரி – வைதலாவை அரச தோட்டம்
திரு. எம்.எம்.சீ.பீ அஹெலமல்பே	தோட்ட அதிகாரி – வுட்சய்ட் அரச தோட்டம்
திரு. சீ.எஸ்.எஸ்.எம் திசாநாயக	தோட்ட அதிகாரி – நிகோலோய அரச தோட்டம்
திரு. சீ.ஜே தஸநாயக	தோட்ட அதிகாரி (வெளிநாட்டு விடுமுறை)
திரு. சீ.எச்.எச்.கே.ஜீ லக்விரு	சிரேஷ்ட உதவித் தோட்ட அதிகாரி (குடா ஓய அரச தோட்டம்)
திரு. ஜீ.கே.ஆர்.பீ கிரியல்ல	தோட்ட அதிகாரி (விஹாரகலை அரச தோட்டம் – நீட்வுட் பிரிவு)

நிறுவனக் கட்டமைப்பு

உரு 01 - நிறுவனக் கட்டமைப்பு




தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகம் மற்றும் தோட்டங்களின் ஆளணி

HM 2-1	பொது முகாமையாளர்	1
HM 1-1	பிரதிப் பொது முகாமையாளர் - நிதி, நிர்வாகம்	3
MM 1-1	முகாமையாளர் - நிதி, நிர்வாகம், காணி, பெருந்தோட்டம் சந்தைப்படுத்தல், பெறுகை உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காளர், தோட்ட அதிகாரி	21
JM 1-1	கணக்காய்வு உத்தியோகத்தர், உதவிக் கணக்காளர், உதவி முகாமையாளர் - போக்குவரத்து, சந்தைப்படுத்த உதவி தோட்ட அதிகாரி, நிர்வாக உதவியாளர்	24
MA 5-2	பிரத்தியேக உதவியாளர் - தலைவர் மற்றும் பிரத்தியேக உதவியாளர் - பொது முகாமையாளர்	2
MA 1-1	முகாமைத்துவ உதவியாளர்	30
PL 3	ஓட்டுநர்	5
PL 1	நிறுவன உதவியாளர்	3
	மொத்தம்	89

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டங்களின் பரவல்

உரு 02 - இலங்கையில் பெருந்தோட்டங்களின் பரவல்



தலைவரின் மீளாய்வு



நான் 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியைப் பொறுப்பேற்கையில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை 2016 ஆம் ஆண்டு வரை மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆதலால், குறித்த ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகளை விரைவாக தயார்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆலோசனை கூறினேன்.

கூட்டுத்தாபனம் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா. 147.7 மில்லியன் மற்றும் ரூபா. 329.8 மில்லியன் நட்டமடைந்தது. அவ்வகையில், கூட்டுத்தாபனம் முன்னைய வருடத்தினை விட மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் ஆண்டில் அடைந்த நட்டம் 123.29% சதவீதமாக அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் 572,318 கிலோ கிராமாக இருந்த தேயிலை உற்பத்தி 2019 ஆம் ஆண்டில் 539,672 கிலோ கிராமாக, அதாவது, 5.7 சதவீதத்தினால் குறைந்துள்ளது. அதேவேளை, 2018 ஆம் ஆண்டில் ஒரு கிலோ கிராம் முடிவுத் தேயிலைக்கான சராசரி உற்பத்திச் செலவு ரூபாய். 583.1 ஆக இருந்ததுடன், அது 2019 ஆம் ஆண்டில் ரூபாய். 676.9 ஆக அதிகரித்துள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமை ஸ்திரமின்மைக்கு தோட்டங்களின் விளைச்சல் குறைந்தமை, சந்தைப்படுத்தலில் ஏற்பட்ட நட்டம், தொழிற்சாலைகளின் உற்பத்திச் செலவு அதிகரித்தமை போன்ற பல்வேறு காரணிகள் வழிகோலின. அத்துடன், நிர்வாக மற்றும் பெறுகைப் பிரச்சினைகள் மற்றும் வன முகாமைத்துவத் திட்டத்திற்கேற்ப வெட்டு மரங்களை வெட்டுவதற்கு அனுமதி பெறுவது தாமதமடைந்தமை போன்ற காரணங்களால் வெட்டு மர விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், போதியளவு வருமானத்தையும் முதலீட்டினையும் உருவாக்கத் தவறியதன் காரணமாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு விவசாய உற்பத்திகளுக்குத் தேவைப்படும் உள்ளீடுகளை போதியளவு வழங்க முடியாதிருந்ததோடு அது தேயிலைத் தொழிற்சாலைகளையும் முறையாக நிர்வகித்து நவீனமயப்படுத்தத் தவறியுள்ளது. இவற்றின் பெறுபேறாக கடந்த சில வருடங்களாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நட்டத்தையே பதிவு செய்துள்ளது.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் உலக மரபுரிமையான நக்கிள்ஸ் வன ஒதுக்க வலயத்தினைச் சூழ அமைந்திருப்பதால் எமது தோட்டங்களில் உள்ளங்களைக் கவரும் மிகவும் அழகான இடங்களைக் காணலாம். ரிவஸ்டர்ன் நுழைவாயில் வழி, தன்கந்த ஏரி மற்றும் முகாம் அமைக்கும் இடம், 360^0 காட்சித் தளங்கள், தளிய வெட்டுனு (Thaliya watunu Ella) எனும் நீர்வீழ்ச்சி, ஜோடு எல்ல (Jodu Ella) எனும் நீர்வீழ்ச்சி, சாரி எல்ல (Saree Ella) எனும் நீர்வீழ்ச்சி, வெவதென்ன முகாமிடும் தளம் மற்றும் நீர்த்தேக்கம் உள்ளிட்ட மிகவும் அழகான, மனதைக் கவரும் பல இடங்கள் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களினுள்

அமைந்துள்ளன. தற்போது இவ்விடங்களைத் தரிசிப்பதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகை தருவதுடன் அவர்களுக்கு மிகவும் வரையறுத்த வசதிகளை வழங்குவதனூடாக கூட்டுத்தாபனத்திற்கு ஓரளவு வருமானம் கிடைத்தாலும் சிறந்த வசதிகளை வழங்குவதனூடாக உயர் வருமானத்தை ஈட்ட முடியும் என்பது எனது அவதானமாகும்.

சில வருடங்களாக வருடாந்த கணக்கறிக்கைகளை உரிய திகதியிலேயே சமர்ப்பிக்க முடியாதிருந்தமையினால் 2020 செப்டம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பு பூர்த்திசெய்திருக்க வேண்டிய 2019 ஆம் ஆண்டுக்குரிய இவ்வருடாந்த அறிக்கையானது இரண்டு வருடங்கள் தாமதமடைந்துள்ளது. என்றாலும், 2021 ஆம் ஆண்டாகும் போது உரிய திகதியிலேயே வருடாந்த கணக்குகளைப் பூர்த்திசெய்து 2019 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கையைத் தயார்செய்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய ஆளணியினருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கேற்ப, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கையை பணிப்பாளர் சபை சார்பாக சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

சட்டத்தரணி ஸ்ரீ மால் விஜேசேகர
தலைவர்
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

நிறுவனத்தின் பின்னணி

சட்ட நிலைமை

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 1958 ஆம் ஆண்டு, 4 ஆம் இலக்க லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டதுடன், பின்னர் 1962 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க மற்றும் 1979 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்கச் சட்டங்கள் குறித்த சட்டம் திருத்தப்பட்டது.

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றுப் பின்னணி

1958 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டுள்ளது. விடயத்திற்குப் பொறுப்பபான கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் கையளிக்கப்படுகின்ற தோட்டங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பயிரிடப்பட்ட காணிகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதும், பயிர்ச்செய்கையை முறையாக முகாமைத்துவம் செய்வதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பதற்கான பிரதான நோக்கங்களாக அமைந்திருந்தன. மேலும் காணி ஆணையாளர் மற்றும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் கையகப்படுத்தப்பட்ட தோட்டங்களை முகாமைத்துவம் செய்து நிர்வகிப்பதற்கு உரிமை மாற்றம் வழங்கப்படுவதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை நிறுவுவதற்கான இதர நோக்கங்களாகும்.

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் துவக்கத்திலிருந்தே அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்ட பல தோட்டங்களுடன் மாத்திரம் செயற்பட்டதால், அது உருவாக்கப்பட்ட நோக்கத்தை சிறந்த வகையில் நடைமுறைப்படுத்தியது. ஆதலால் கிட்டிய காலத்தில் சுமார் 15,000 ஹெக்டேயர் தோட்டங்களை கொள்வனவு செய்ய முடிந்தது. உறுதியான சட்டத்தை நிறுவி அதற்கமைய முறையான முகாமைத்துவத்தை பேணிச் சென்றதன் காரணமாக இவ்வளர்ச்சி ஏற்பட்டது எனக் கூறலாம்.

அதுவரை உரிமம் பெற்ற சுமார் 25 தோட்டங்களை முகாமை செய்து வந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு 1972 ஆம் ஆண்டு காணிச் சீர்திருத்தச் சட்டம் மற்றும் 1975 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் மக்கள் மயப்படுத்தப்பட்ட தோட்டங்கள் மற்றும் அதுவரை காணப்பட்ட உரிமங்களை இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக கையகப்படுத்தப்பட்ட தோட்டங்களில் சுமார் 250 தோட்டங்களை விருத்தி செய்து மேம்படுத்துவதற்காக லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட ஏனைய தோட்டங்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டு அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

பாரியளவில் விஸ்தரிக்கப்பட்டிருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை விருத்தி செய்வதற்காக முகாமைத்துவக் கட்டமைப்பினை மாற்ற வேண்டியேற்பட்டது. அதன்படி, மிகவும் வினைத்திறனும் பயனுறுதியும் மிக்கதாக தோட்டங்களை முகாமைத்துவம் செய்வதற்காக 1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் பிராந்திய அலுவலகங்களை நிறுவியது. அதற்கமைய தோட்டங்களின் நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டது.

லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டம் 1979 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. அதன் 2 ஆம் உறுப்புரைக்கேற்ப அதுவரை லங்கா அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என அழைக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் பெயர் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமாக திருத்தியமைக்கப்பட்டது.

மேலும், 1979 ஆம் ஆண்டு 49 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 6 ஆம் இலக்க உறுப்புரையின் படி இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. அதற்கமைய,

அ) தோட்டங்களிலுள்ள நிலங்களை விவசாய ரீதியாக முகாமை செய்து அதிகபட்சப் பயனுறுதியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மேம்படுத்தல்.

ஆ) நிலத்தில் காணப்படுகின்ற பயிர்ச்செய்கைகளை மறுசீரமைப்புச் செய்து முறையான முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புடன் விவசாயப் பயிர்களை பல்வகைப்படுத்துதல்.

இ) விவசாயப் பொருட்களை பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்.

ஈ) தோட்டங்களில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்துதல்.

உ) தோட்டங்களில் விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் இயந்திர உபகரணங்களை நிறுவி சிறந்த முறையில் பராமரித்து நடாத்திச் செல்லல்.

ஊ) பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் மற்றும் பணிகளை மேற்கொள்ளல்.

1980 ஆம் ஆண்டில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களின் முகாமையை வலுப்படுத்தவும், பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனக் கட்டமைப்பினை நிறுவுவதற்காகவும் பல படிமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதன்படி, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அதிமேதகு சனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1980 பெப்ரவரி மாதம் பிராந்திய அலுவலகங்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மிகவும் அதிகாரம் கொண்ட நான்கு பிராந்திய சபைகள் உருவாக்கப்பட்டன. அவையாவன, S.L.S.P. C. I, II, III மற்றும் IV என்பனவாகும். 1984 ஆம் ஆண்டில் இப்பணிகளை மேலும் விரிவுபடுத்தி பலாங்கொடை மற்றும் மாத்தளைக்கு அண்மித்த தோட்டங்களை சிறந்த வகையில் முகாமை செய்வதற்காக மேலும் இரண்டு சபைகள் S. L. S. P. C V மற்றும் VI ஆக ஸ்தாபிக்கப்பட்டன. இவ்வாறு, தோட்டங்களின் முகாமைத்துவத்தை பன்முகப்படுத்திய போதிலும், கொள்கை உருவாக்கம், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் நிதியளிப்பு நடவடிக்கைகள் இலங்கை அரச தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பு மத்திய சபையினால் மேற்கொள்ளப்பட்டன.

இச் சீர்திருத்தங்களின் வினைத்திறனின்மை மற்றும் பயனுறுதியின் குறைவுத் தன்மையை உணர்ந்த பின்னர், அப்போதைய அரசாங்கத்தினால் "அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது அரச சொத்துக்களுக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களை அரச கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின்" கீழ் 1992 ஆண்டு 22 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் நிறுவப்பட்டன. அவ்வாறான 22 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 402 இலாபமீட்டும் மற்றும் அதிக உற்பத்தித் திறன் கொண்ட தோட்டங்களின் முகாமைத்துவம் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டன. நீண்ட காலமாக நட்டத்தில் இருந்த, மற்றும் மலையக மற்றும் தாழ்நிலத் தேயிலையின் சிறப்பியல்புகள் இல்லாத, குறைந்த விற்பனை விலையுடைய 55 நடுத்தரப் பிரதேச தேயிலைத் தோட்டங்களை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு மீதமாகின. இந்த 55 தோட்டங்களில் 32 தோட்டங்கள் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு விடப்பட்டன. இந்த 32 தோட்டங்களில் 11தோட்டங்கள் வரையறுக்கப்பட்ட எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு 1993 ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்டது. இதன்படி, எஞ்சிய 21 தோட்டங்களை 16 தோட்டங்களாக கூட்டிணைத்து இலங்கை அரச

பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்த 16 தோட்டங்களுக்கு உரித்தான பெரும்பாலான நிலங்களில் பழைய விதைத் தேயிலைப் பயிர்களே இருந்தன. அத்துடன், கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் நக்கிள்ஸ் மலைத்தொடரைச் சுற்றி கரடுமுரடான சாய்வான மண் அடுக்கை காணப்படுகின்றது. ஆதலால், இந்த நடுத்தரப் பிரதேசத் தோட்டங்களின் தேயிலைக் கொழுந்து விளைச்சல் இயற்கையாகவே மிகவும் குறைவாகவே இருந்தமை, குறைந்த விற்பனை விலை மற்றும் குறைந்த விளைச்சல் ஆகிய மூன்று காரணங்களால் இப் பகுதியிலுள்ள தோட்டங்கள் நீண்ட காலமாக நஷ்டத்தில் இயங்கும் தோட்டங்களாகும்.

அவ்வாறே, 1992 ஆம் ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஊழியர்களையும் ஓய்வு பெறச் செய்து அதன் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. 1994 ஆம் ஆண்டில், ஒரு புதிய ஊழியர் குழாத்தை நியமித்து மீண்டும் செயற்பாடுகளைத் தொடங்கியுள்ளன. அன்றிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விடயப் பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது. மேலும், 2001 முதல் 2004 வரை நட்டத்தில் இயங்கி வந்த இக்கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு சுமையாக இருந்ததால், அரசின் சுமையை குறைக்கும் வகையில் சில தோட்டங்களும் சொத்துக்களும் நீண்ட காலக் குத்தகைக்கு விடப்பட்டன.

முதலீட்டுச் சபையின் பரிந்துரையின் பேரில், தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்ட வைத்தலாவை, வுட்சைட் மற்றும் ஹெயார்பார்க் தோட்டங்கள் மற்றும் கொட்டகங்கை தொழிற்சாலை போன்ற ஒரு சில திட்டங்கள் தோல்வியின் காரணமாக குத்தகைதாரர்களால் கைவிடப்பட்டன. பின்னர், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு பல பொறுப்புகளுடன் ஹெயார்பார்க் தோட்டத்தையும் கொட்டகங்கை தொழிற்சாலையையும் கையகப்படுத்த வேண்டியிருந்தது. மோசமான முகாமைத்துவம் காரணமாக சீர்குலைந்து கிடக்கும் ஹெயார்பார்க் தோட்டங்கள், அத்துமீறிய கையகப்படுத்தல் மற்றும், பயிர்ச் செய்கையை பராமரிக்காமை போன்ற காரணங்களினால் தோட்டங்கள் மிகவும் நட்டம் பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டன. வைத்தலாவை மற்றும் வுட்சைட் தோட்டங்கள் பின்னர் வேறு தனியார் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. அந்நிறுவனத்தினால் அத்தோட்டங்களின் தவறான முகாமைத்துவம் காரணமாக வுட்சைட் தோட்டத்தை கைவிட்டு வைத்தலாவை தோட்டத்தை மட்டும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

2006 ஆம் ஆண்டு அரசாங்கக் கொள்கை மாற்றப்பட்டதோடு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் விடயப் பரப்பிலிருந்து நீக்கப்பட்டு, மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவகத்தின் விடயப் பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு அதனை வர்த்தக ரீதியாக வலுவான அரசாங்க மூலோபாய அமைப்பாக முகாமைத்துவம் செய்யும் புதிய கொள்கையொன்றினை அறிமுகப்படுத்தியது. இத் தோட்டங்களை வெறுமனே தேயிலைத் தோட்டங்களாக நிர்வகிக்கும் முறைமை மூலோபாய தொழில் முயற்சிகள் முகாமைத்துவ நிறுவனத்தின் தலையீட்டால் மாற்றப்பட்டது. அதன்படி, தோட்டங்களின் சொத்துக்களை முகாமைத்துவம் செய்யும் புதியதொரு எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புதிய எண்ணக்கருவின் கீழ் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்கள் அதாவது ரூபா. 3000 மில்லியன் பெறுமதியான வெட்டுமர வளங்களை நிர்வகித்தல், சிறிய நீர் மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்குவதற்கு சாத்தியமுள்ள இடங்களைத் தயார்செய்தல், தோட்டங்களின் கார்பன் தட்டை கணக்கிட்டு விற்பனை செய்தல் மற்றும் நஷ்டமடையும் தோட்டங்களில் பயிர்களை பல்வகைப்படுத்துதல் போன்ற பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

2007 ஆம் ஆண்டு நக்கிள்ஸ் உலக மரபுரிமைத் தளமாக வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதுடன், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான தோட்டங்களின் பெரும் நிலப்பகுதி உலக மரபுரிமைத் தளத்தில் உள்வாங்கப்பட்டது. அதற்கமைய, வணிக ரீதியான பயிர்களான, ஏலக்காய் செய்கைக்கான நிலத்தினைப் போன்றே

தேயிலைச் செய்கையின் நிலங்களும் நக்கிள்ஸ் வன ஒதுக்கத்துடன் சேர்க்கப்பட்டன. எவ்வாறாயினும், வன ஒதுக்கத்துடன் இணைக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு மற்றும் எல்லைகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக தோட்டங்களின் முகாமைத்துவம் மற்றும் பாதுகாக்கப்பட்ட வலயத்தின் முகாமைத்துவமும் சிக்கலாக மாறியது.

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மிகவும் கவர்ச்சிகரமான இடங்கள்.

கெலேபொக்கை 360^0 வியுவ் பொய்ன்ட்





கெலேபொக்கை 360^{0} வியுவ் பொய்ன்ட் (1,175 மீற்றர் உயரம்) பொழுதுபோக்கு நோக்கில் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்துள்ள ஒரு இடமாகும். இந்த மலை உச்சியானது மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களின் எல்லைகளில் அமைந்திருப்பதுடன் இது ஹத்லே சிறிய உலக முடிவு மற்றும் ஹுன்னஸ்கிரிய மலை உருவாகும் ஒரே மலை உச்சிகளை பகிர்ந்துகொள்கின்றது. மலைத்தொடர் வடக்கு நோக்கி நீண்டு செல்வதுடன் நக்கிள்ஸ் இன் மேற்கு அத்திவாரத்துடன் இணைகின்றது. தெளிவாக இருக்கும் ஒரு நாளில் மத்திய மலை நாடு, கண்டி நகரம், செம்புவத்தை வாவி மற்றும் நக்கிள்ஸ் மலைக் குன்றுகள் என்பவற்றை பார்த்து இரசிக்க முடியும்.

இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கு தங்கி முகாம் அமைக்கும் ஒரு தளமும் இரண்டு ஓய்வு பங்களாக்களும் உள்ளன. சமதளமாக இருக்கும் மலை உச்சியின் நடு அரைப் பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட இந்து ஆலயம் ஒன்றும் குச்சிகளைக் கொண்டு வேயப்பட்டிருக்கும் குடிசையும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். பகல் நேரத்தில் பிரதேசத்தினைச் சூழ பனிமூட்டம் இருப்பதால் தடைகளின்றி காட்சிகளைக் கண்டு களிப்பதற்கு காலை நேரத்தில் சஞ்சரிப்பது மிகவும் சிறந்தது.

<u>பர்ன்ஸய்ட்</u>





கண்டியில் அமைந்திருக்கும் பர்ன்ஸய்ட் பங்களா ரங்கள பொல்கொல்லை நீர்த்தேக்கத்தின் சீ ப்ளேன் விமான நிலையத்திலிருந்து 13 மைல் தொலைவில் அமைந்துள்ள கவர்ச்சிகரமான இடமாகும்.

தன்கந்த வாவி - மிட்லன்ட்ஸ்





கவர்ச்சிகரமான தன்கந்தை வாவி மத்திய மாகாணத்தின் ஒரு நீர்த்தேக்கம் ஆகும். அதன் உயரம் 957 மீற்றர் ஆகும். இந்த வாவி கிரிமெடியாரன்த மற்றும் தங்கந்தவத்தைக்கு அருகே இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மிட்லன்ட் தோட்டத்திற்கு அருகில் அமைந்துள்ளது.


ஹுன்னஸ்கிரிய





கண்டி நகரத்திலிருந்து 22 கிலோ மீற்றர் தொலைவில் மாத்தளை மாவட்டத்தின் அல்கட்டுவை கிராமத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நக்கிள்ஸ் மலைத்தொடரும் ஹுன்னஸ் போல்ஸ் நீர்வீழ்ச்சியும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளை கவர்ந்துள்ள கவர்ச்சிகரமான இடங்களாகும். இந் நீர்வீழ்ச்சியைக் கண்டுகளிப்பதற்கு வருகைதரும் உல்லாசப் பயணிகளுக்கு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டத்தினால் தேவையான வசதிகள் செய்துள்ளன.

வெவதென்னை – வுட்சய்ட்







வெவதென்னை முகாம் அமைக்கும் திடல், கண்டி நகரத்திலிருந்து 37.9 கிலோ மீற்றர் தொலைவில் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் மத்திய கண்டிப் பிரதேசத்திலுள்ள வுட்சய்ட் அரச தோட்டத்தில் அமைந்துள்ளது. இந்த அழகான முகாம் திடலுக்குச் செல்வது ஓரளவு கஷ்டமாக இருந்தாலும் அது பல இனிமையான அநுபவங்கள் நிறைந்த பயணமாகும். கண்டியிலிருந்து வெவதென்னை நோக்கி பயணிக்கும் வழியில் இருக்கும் உலகப் பிரபலமான விக்டோரியா நீர்த்தேக்கமும் மனதைக் கவரும் காட்சியாகும்.

இணைப்புத் தகவல்கள்

இணைப்பு உத்தியோகத்தர்	**: திரு. அமில ஜயவர்தன**
இணைப்பு மத்திய நிலையம்	**: பிராந்திய அலுவலகம்**
முகவரி	: பிராந்திய அலுவலகம், கல்பிஹில்லை, பன்விலை.
தொலைபேசி இலக்கம்	: 081-5634903
தொலைநகல் இலக்கம்	: 081-5634902
மின்னஞ்சல் முகவரி	: regionalofficegp@gmail.com

2019 ஆம் ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் தோட்டங்களின் நிலைமை.

2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை 15 ஆகும். அவற்றுள் 14 தோட்டங்கள் கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் வலஹந்துவைத் தோட்டம் காலி மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

அட்டவணை 1 - தோட்டங்களின் விபரம்

இல	தோட்டத்தின் பெயர்	மாவட்டம்	பிரதேச செயலகப் பிரிவு	மொத்த நிலப்பரப்பு
1	அலகொல்லை	கண்டி	பன்விலை	819.86
2	கொடகங்கை	கண்டி	மெததும்பரை	1,059.81
3	கல்பிஹில்லை	கண்டி	பன்விலை /குண்டசாலை	761.24
4	கோமரை	கண்டி	பன்விலை	731.13
5	பாகலை	கண்டி	பன்விலை	449.49
6	ஹெயார்பார்க்	கண்டி	உடுகும்புரை	976.75
7	ஹுன்னஸ்கிரிய	மாத்தளை	உடுகும்புரை	739.72
8	கெலேபொக்கை	கண்டி	பன்விலை	1,370.36
9	குடாஓய	மாத்தளை	ரத்தொட்டை	36.00
10	மிட்லன்ட்	மாத்தளை	ரத்தொட்டை	1,221.31
11	நிகோலோய	மாத்தளை	ரத்தொட்டை	332.41
12	ஓபல்கலை	மாத்தளை	மெததும்பரை	723.10
13	ரங்களை	கண்டி	மெததும்பரை	630.60
14	வைதலாவை	கண்டி	மெததும்பரை	551.05
15	விஹாரகலை	பதுளை	ஹல்துமுல்லை	41.90
16	வுட்சய்ட்	கண்டி	மெததும்பரை	472.75
17	வலஹந்துவை	காலி	அக்மீமனை	96.22
	மொத்தம்			**11,013.70**

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் காணிகள் மற்றும் தோட்டங்கள் தொடர்பான சாராம்சம்.

அட்டவணை 02 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட தோட்டங்கள் பற்றிய சாராம்சம்.

தோட்டம்	கொள்வனவு செய்த திகதி	நிலப்பரப்பு (ஹெ)
ஹபுகஸ்தன்னை	1/1/1972	1,709.31
அலுபொலை	1/1/1972	1,228.74
கலபொடை	1/1/1972	376.92
ஹல்கொல்லை	1/1/1972	1,006.88
ராஸ்ஸகலை	1/1/1972	776.49
விகிலிய	1/1/1972	805.67
திஸ்பனே	1/1/1972	384.62
மெதகந்தை	1/1/1972	676.11
சோகமை	1/1/1972	476.11
மதுரட்டை	15/05/1975	278.54
மடுவலை	1/6/1973	659.51
அய்ஸ்லெப்	26/11/1973	382.59
வெதமுல்லை	1/9/1973	484.62
இறம்பொடை	1/9/1973	765.18
கிரேவிவெளி	1/1/1974	320.24
தென் மெததும்பரை	1/2/1974	505.26
கெலோலினா	1/7/1974	1,063.56
கல்லேபொத்த	1/7/1974	752.63
கெதண்ட்	1/7/1974	203.24
சனட்ஹெலியர்	1/7/1974	172.87
ரொஹாமெப்டன்	15/3/1974	100.61
நன்பேரியல்	11/4/1974	203.64
உடபொலை	27/5/1975	278.54
டெல்கின்	19/5/1975	1,223.38
எல்பிடிய	1/6/1975	785.02
கலஹ - சில்க் ப்ரஜக்ட்	1/7/1975	694.33
ஹொட்வில்	1/7/1975	412.15
கெம்பியன்	1/7/1975	848.99
எஹலியகொடை	1/8/1975	410.93
சபுமல்கந்தை	1/8/1975	646.96
தியதாவை		280.57
மொத்தம்		**18,914.21**

அட்டவணை 03 – இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கிடைத்த காணிகள்

வர்த்தமானி இல.	திகதி	கிடைத்த விதம்	தோட்டங்களின் எண்ணிக்கை		பெயரளவு மதிப்பு
			பிராந்தி பெருந்தோட்டக் கம்பனி	இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்	
150/12	7/24/1981	காணிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழு	38	0	இல்லை
181/12	2/27/1989		55	25	இல்லை
815/10	4/21/1994		122	1	123
195/6	5/31/1982		6	8	123
569/14	8/2/1989		3	0	123
571/14	8/14/1989		1	0	123
206/15	8/20/1982		0	1	123
230/12	2/2/1983		1	0	123
937/2	8/19/1996		8	0	123
157/13	4/3/1975	அரசு	5	0	123
439/18	2/6/1987		0	1	123
மொத்தம்			**239**	**36**	

அட்டவணை 04 – பல்வேறு அரச நிறுவனங்களினூடாக இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைத்த காணிகளின் விபரம்

தோட்டம்	கிடைத்த விதம்	கிடைத்த திகதி	நிலப்பரப்பு (ஹெ.)
ஹிக்கொடை	காணி ஆணையாளர்	1/10/1960	319.81
ரதெல்லை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	633.60
யடவத்தை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	522.67
நெலஉலை	உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	1/10/1960	337.65
பல்லேகலை	காணி ஆணையாளர்	1/1/1968	1270.04
மொத்தம்			**3083.77**

தோட்டங்களின் நிலப் பயன்பாடு 2019

அட்டவணை 05 – தோட்டங்களின் நிலப் பயன்பாடு

ஹெக்டயருக்கான கூற்று, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2019

தோட்டம்	தேயிலை பயிரிடப்பட்ட காணியின் பரப்பு (ஹெக்டயர்)						இறப்பர் (ஹெ.)		சிறு ஏற்றுமதிப் பயிர்கள் (ஹெ.)	வெட்டுமரப் பயிர்ச்செய்கை (ஹெ.)		புல் (ஹெ.)	வயல் (ஹெ.)	வேறு (ஹெ)	மொத்த நிலப்பரப்பு (ஹெ.)
	தேயிலை வருமானம்		ஒப்பந்த அடிப்படையில் கொழுந்து பறிப்பதற்கு வழங்கியுள்ள காணியின் பரப்பு		தேயிலை நாற்று	மீள்பயிரிடல்	பழைய இறப்பர் பயிர்ச்செய்கை	இறப்பர் மீள் பயிரிடல்		வர்த்தக நோக்கிலான வெட்டுமரம்	எரிபொருளுக்கான வெட்டுமரம்				
	தேயிலை நாற்று	தளிர் தேயிலை	தேயிலை நாற்று	தளிர் தேயிலை											
அலகொல்லை	161.75	114.95	115.50	-	1.00	12.00	-	-	68.60	24.00	55.38	-		266.68	**819.86**
கொட்டகங்கை	261.46	34.42	144.31	-	0.40	3.00	-	-	53.69	-	24.14	-		538.39	**1,059.81**
கல்பிஹில்லை	71.28	165.01	-	-	2.21	7.04	-	-	5.85	-	70.21	-		444.29	**765.89**
கோமரை	104.85	116.73	128.61	-	-	9.00	-	-	74.80	37.90	1.60	-		257.64	**731.13**
பாகலை	101.80	77.78	84.66	-	0.42	7.00	-	-	-	-	89.62	-		88.21	**449.49**
ஹெயாபர்க்	164.50	-	183.50	-	-	-	-	-	55.00	-	-	-		573.75	**976.75**
ஹுன்னஸ்கிரியை	153.14	37.78	34.21	-	0.60	2.00	-	-	30.37	5.00	2.00	-		474.62	**739.72**
கெலேபொக்கை	188.97	304.24	190.43	-	1.21	32.50	-	-	148.31	335.46	15.00	14.00	17.67	122.57	**1,370.36**
மிட்லன்ட்	104.42	117.41	57.17	-	1.34	15.00	-	-	266.79	-	208.84	-	2.00	448.34	**1,221.31**
நிகோலோய	-	47.14	2.43	-	-	26.50	-	-	65.64	-	18.00	-		172.70	**332.41**
ஓபல்கலை	36.10	48.90	55.90	-	1.80	-	54.00	-	169.50	-	68.00	-		331.80	**766.00**
ரங்களை	109.10	85.44	130.20	-	2.00	5.00	-	-	7.50	-	-	-		291.36	**630.60**
வைதலாவை	34.00	39.20	74.69	-	-	-	-	-	61.06	-	47.39	-		294.71	**551.05**
வலஹந்துவை	2.05	-	-	-	-	1.00	65.47	5.00	7.40	-		-		14.30	**95.22**
வுட்சய்ட்	-	15.00	190.33	-	0.20	5.00	-	-	35.61	240.09	157.50	-		73.81	**717.54**
மொத்தம்	**1,493.42**	**1,204.00**	**1,391.94**	-	**11.18**	**125.04**	**119.47**	**5.00**	**1,050.12**	**642.45**	**757.68**	**14.00**	**19.67**	**4,393.17**	**11,227.14**

தோட்டங்களின் பிரதான வருமானப் பயிர்களான தேயிலை மற்றும் இறப்பர் விளைச்சல்களை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்குதல்.

அட்டவணை 06 - தோட்டங்களின் பிரதான வருமானப் பயிர்களான தேயிலை மற்றும் இறப்பர் விளைச்சல்களை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பிட்டு நோக்குதல்.

தோட்டம்	தேயிலை - பச்சைக் கொழுந்து (கிலோ கிராம்)									
	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019
அலகொல்லை	1,065,220	1,077,059	952,633	880,458	769,499	787,217	705,364	759,745	734,923	617,413
கொடகங்கை	352,166	312,648	370,453	258,308	194,663	216,383	170,940	205,002	293,452	253,262
கல்பில்லை	1,003,481	971,105	879,545	880,379	665,646	690,856	675,717	775,779	790,235	681,020
கோமரை	602,682	647,939	566,360	574,639	486,583	547,711	667,328	764,337	743,270	706,865
பாகலை	981,330	985,357	843,579	774,142	682,702	682,097	429,360	482,980	547,672	412,474
ஹொபார்க்	543,660	455,650	399,609	463,485	375,497	298,837	229,330	252,911	298,088	252,867
ஹுன்னஸ்கிரிய	651,682	370,875		520,190	431,449	578,320	515,374	528,226	496,959	487,032
கெலேபொக்கை	1,943,439	2,153,655	2,006,814	1,762,933	1,331,815	1,608,769	1,373,408	1,382,689	1,468,809	1,435,669
குடாஓய	-	-	-	-	-	-	-	-	-	2,581
மிட்லன்ட்	1,145,480	998,500	669,558	730,241	395,511	586,442	438,614	503,015	586,207	494,211
நிகோலோய****					458	1,122	1,550	2,979	159,993	138,379
ஓபல்கலை	421,186	369,534	369,158	430,719	297,287	301,755	247,751	305,494	354,023	263,246
ரங்களை	1,024,601	948,550	739,211	658,274	521,922	678,266	604,332	492,346	606,262	579,595
வைதலாவை***									228,362	157,356
விஹாரகலை	-	-	-	-	-	-	-	-	-	9,267
வுட்ஸய்ட்**									22,153	44,463
மொத்தம்	**9,734,927**	**9,290,872**	**7,796,920**	**7,933,768**	**6,153,032**	**6,977,775**	**6,059,068**	**6,455,503**	**7,330,409**	**6,535,701**

தோட்டம்	*இறப்பர் - ஒட்டுப்பால் (கிலோ கிராம்)									
	2010	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019
வலஹந்துவை	50,163	49,332	39,218	44,861	40,140	36,809	37,522	42,470	33,395	28,122


**** நிகோலோய அரசத் தோட்டம் 2010 - 2013 முதல் மிட்லன்டல் உடன் கூட்டிணைக்கப்பட்டது.

*** வைதலாவை அரச தோட்டம் 2008 - 2017 முதல் மருடி கம்பனியால் நிர்வகிக்கப்படுகின்றது.


** 2018 ஆம் ஆண்டுக்கு முன் வுட்சய்ட் தோட்டம் வெளியாருக்கு ஒப்படைக்கப்பட்டது.

* இறப்பர் பாலின் DRC பெறுமானம் கிலோ கிராமுக்கு மாற்றப்பட்டுள்ளது. (Dry Rubber Content)

உரு 03 – தேயிலை விளைச்சலை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பீடு செய்தல்



உரு 04 – இறப்பர் விளைச்சலை கடந்த 10 வருடங்களுடன் ஒப்பீடு செய்தல்



தோட்டங்களின் ஒரு ஹெக்டெயர் நிலப்பரப்பிலிருந்து கிடைத்த பச்சைக்கொழுந்து மற்றும் இறப்பர் விளைச்சல் – *2009 – 2019*

அட்டவணை 07 - தோட்டங்களின் ஒரு ஹெக்டெயர் நிலப்பரப்பிலிருந்து கிடைத்த பச்சைக்கொழுந்து மற்றும் இறப்பர் விளைச்சல் – 2009 – 2019


தோட்டம்	பச்சைக் கொழுந்து - ஹெக்டயருக்கு கிலோ கிராம்.										
	2009	**2010**	**2011**	**2012**	**2013**	**2014**	**2015**	**2016**	**2017**	**2018**	**2019**
அலகொல்லை	2,328	2,828	3,070	2,856	2,660	2,321	2,293	2,121	2,479	2,367	2032.05
கொடகங்கை	1,494	1,523	1,353	1,316	1,400	1,060	860	819	935	930	809.1
கல்பிஹில்லை	3,696	4,228	5,088	4,009	3,819	2,926	2,981	2,916	3,656	3,901	3361.95
கோமரை	2,746	2,958	3,772	3,474	3,363	3,121	3,363	3,084	3,451	3,139	3027.15
பாகலை	2,454	2,781	2,851	3,595	3,223	2,772	2,716	2,447	2,781	2,883	2241.3
ஹெயார்பார்க்	1,823	1,807	1,633	1,274	1,633	1,274	995	674	795	1,260	1102.05
ஹுன்னஸ்கிரி	2,651	3,242	3,474	3,321	2,828	2,181	2,744	2,749	2,823	2,599	2548.2
கெலேபொக்கை	2,414	2,791	3,795	3,479	3,079	2,353	2,828	2,888	2,777	2,651	2552.85
குடா ஓய	0	0	0	0	0	0	0	0	0	0	69.75
மிட்லண்ட்	2,736	3,088	2,851	2,498	2,460	2,084	2,167	1,995	2,293	2,585	2204.1
நிகோலோய	2,410	-	-	-		1,772	1,702	2,544	2,884	3,218	2859.75
ஓபல்கலை	3,339	3,791	3,228	3,619	3,972	2,944	2,814	2,309	2,940	4,013	2999.25
ரங்களை	3,072	3,456	367	3,772	3,256	2,553	3,247	2,916	2,316	2,581	2659.8
வைதலாவை				-	-	-	-	-	-	2,688	2092.5
விஹாரகலை	-	-	-	-	-	-	-	-	-	-	223.2
மொத்தம்	**31,162**	**32,493**	**31,484**	**33,214**	**31,693**	**27,363**	**28,712**	**27,463**	**30,130**	**34,815**	**30,560**

தோட்டம்	* இறப்பர் ஒட்டுப்பால் - ஒரு ஹெக்டயருக்கு கிலோகிராம்										
	2009	**2010**	**2011**	**2012**	**2013**	**2014**	**2015**	**2016**	**2017**	**2018**	**2019**
வலஹந்துவை	821	776	763	603	690	618	566	577	649	510	430

உரு 05 – ஒரு ஹெக்டயருக்கான பச்சைத் தேயிலைக் கொழுந்து விளைச்சல்



உரு 06 – ஒரு ஹெக்டயருக்கான பச்சைத் தேயிலைக் கொழுந்து விளைச்சல்



மேற்கு மத்திய பிராந்தியத்தில் 2019 ஆண்டின் வருடாந்த மழை வீழ்ச்சி

அட்டவணை 08 - மேற்கு மத்திய பிராந்தியத்தில் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த மழை வீழ்ச்சி.

வருடாந்த மழைவீழ்ச்சி - 2019	
தோட்டம்	மழைவீழ்ச்சி (மி.மீ)
அலகொல்லை	1560
கொடகங்கை	2289
கல்பிஹில்லை	1343
கோமரை	2348
பாகலை	2148
ஹெயார்பார்க்	2808
ஹூன்னஸ்கிரியை	946
கெலேபொக்கை	2278
மிட்லன்ட்	2946
நிகோலோய	1730
ஓப்கலை	2508
ரங்களை	3776
வைத்தலாவை	1733

மேற்கூறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் மேற்கு மத்திய வலயத்திற்கு சிறந்த மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது.

கடந்த 03 வருடங்களுக்கான உரப் பயன்பாடு

மொத்தத்தில் கருத்திற்கொள்ளத்தக்க நிதி ரீதியான நிவாரணம் கிடைத்துள்ளது. என்றாலும், விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவைப்படும் உரம் மற்றும் களைகொல்லிகளை உரிய முறையில் வழங்குவதற்கு நிர்வாகம் தவறியுள்ளதாகவே தோன்றுகிறது.

அட்டவணை 09 - கடந்த மூன்று வருடங்களுக்கான உரப் பயன்பாடு

வருடம்	பயன்படுத்தப்பட்ட உரம்	உரத்திற்கான செலவு (ரூ.)	பயன்படுத்தப்பட்ட களைகொல்லி (லீற்றர்/கி.கி)	களை கொல்லிக்கான செலவு (ரூ)
2017	306	15,918,300.00	400 kg 1628 l	7,352,984.00
2018	229	7,530,941.60	3347 l	14,308,425.00
2019	215	4,794,652.50	3207 l	14,431,500.00


2019 ஆம் ஆண்டு அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விற்பனை விலை 76.74 ரூபாவாக இருந்ததுடன், மேற்கு மத்திய பிராந்தியத்தில் ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விற்பனை விலை 68.58 ரூபாவாகவும் இருந்தது. இதன்படி, 2018 ஆம் ஆண்டில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை விகிதம் மேற்கு மத்திய வலயத்தின் விற்பனை விகிதத்தினை விட 8.16 அதிக பெறுமதியில் பேணப்பட்டுள்ளது.

கீழுள்ள அட்டவணையில் கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான உற்பத்திச் செலவு ஒப்பீட்டு ரீதியாக காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 10 - கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான ஒப்பீட்டு ரீதியான உற்பத்திச் செலவு

வருடம்	ஒரு கிலோ கிராம் பச்சைத் தேயிலைக் கொழுந்துக்கான உற்பத்திச் செலவு (ரூபாய்)					
	கொழுந்து பறித்தல்	கள வேலை	உரம்	களை கொல்லி	பொதுச் செலவுகள்	மொத்தம்
2017	31.16	12.31	3.64	6.08	49.45	102.64
2018	32.44	13.24	2.59	7.84	45.96	102.07
2019	45.34	18.34	2.15	12.34	44.19	122.36

உரு 07 – கடந்த 03 வருடங்களில் கூட்டுத்தாபனத்தின் ஒரு கிலோ கிராம் பச்சைக் கொழுந்திற்கான ஒப்பீட்டு ரீதியான உற்பத்திச் செலவு



அதற்கமைய, பச்சை தேயிலைக் கொழுந்து ஒரு கிலோ கிராமிற்கான உற்பத்திச் செலவில் உரத்திற்கான செலவு மிகவும் குறைவு பெறுமதியைக் காட்டுகின்றது. உற்பத்திச் செலவில் பெரும் பங்கினை வகிக்கும் கொழுந்துகள் பறித்தல் மற்றும் பொதுச் செலவினங்களை முகாமை செய்யாமல் உரங்களுக்கான முதலீட்டைக் கட்டுப்படுத்தியதனால் எதிர்பார்த்த விளைச்சல் குறைந்துள்ளது. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரசபை மற்றும் முகாமைத்துவம் இந்நிலைமையை அறிந்து கொள்ள தவறியதால் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நீண்டகாலமாக நட்டமடைவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது.


தேயிலை உற்பத்தி

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக தற்போது 10 தேயிலைத் தொழிற்சாலைகள் இருப்பதுடன், தற்போது சீ.டீ.சீ. தேயிலைத் தொழிற்சாலைகள் மூன்று மாத்திரமே இயங்கும் நிலையில் காணப்படுகின்றது. கெலேபொக்கை, மிட்லண்ட்ஸ் மற்றும் ரங்கல ஆகிய மூன்று தேயிலைத் தொழிற்சாலைகள் மூலம் எமது பல தோட்டங்களின் பச்சை கொழுந்து மூலம் முடிவுத் தேயிலை உற்பத்தி செய்யப்படுவதுடன் அவ்வுற்பத்தி நிலைமை கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.


அட்டவணை 11 – தேயிலை உற்பத்தி

தொழிற்சாலை	பச்சைத் தேயிலைக் கொழுந்து (கி.கி)		முடிவுத் தேயிலை (கி.கி)		உற்பத்திசெய்யப்பட்ட முடிவுத் தேயிலை சதவீதமாக		உற்பத்திச் செலவு - ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.		தேறிய சராசரி விற்பனை - ஒரு கிலோ கிராமுக்கு ரூபா.	
	2018	2019	2018	2019	2018	2019	2018	2019	2018	2019
கெலேபொக்கை	1,468,809.45	1,435,669.00	315,873.00	308,746.00	22.89	22.79	569.36	710.28	385.39	362.11
மிட்லண்ட்	586,206.90	494,211.00	126,066.00	106,282.00	23.21	23.40	560.09	659.94	428.20	414.87
ரங்களை	606,262.35	579,595.00	130,379.00	124,644.00	21.82	23.22	592.84	660.02	412.44	358.71
மொத்தம்	**2,661,278.70**	**2,509,475.00**	**572,318.00**	**539,672.00**						

உரு 08 – முடிவுத் தேயிலை உற்பத்தி



உரு 09 – பச்சைத் தேயிலைக் கொழுந்து உற்பத்தி



அட்டவணை 12 – தொழிற்சாலைகள் பற்றி விபரம்

தொழிற்சாலைகள்	அமைந்துள்ள மாவட்டம்	உற்பத்தி செய்யும் தேயிலை இனம்	கொள்ளளவு (கிலோ கிராம்) பிரித்தெடுக்கை (Sifting)	தற்போதைய நிலை
கொடகங்கை	கண்டி	ஓதடொக்ஸ்	1,290	தொழிற்படுவதில்லை
கோமரை	கண்டி	ஓதடொக்ஸ்	8000 (மொத்த கொள்ளளவு)	தொழிற்படுவதில்லை
பாகலை	கண்டி	ஓதடொக்ஸ்	1,419	தொழிற்படுவதில்லை
ஹுன்னஸ்கிரியை	மாத்தளை	சீ.டீ.சீ	1,720	தொழிற்படுவதில்லை
கெலேபொக்கை	கண்டி	சீ.டீ.சீ	12,000 (மொத்த கொள்ளளவு)	தொழிற்படுகின்றது
மிட்லண்ட்	மாத்தளை	சீ.டீ.சீ	1,400	தொழிற்படுகின்றது
தன்கந்தை	மாத்தளை	ஓதடொக்ஸ்	860	தொழிற்படுவதில்லை
நிகோலோய	மாத்தளை	ஓதடொக்ஸ்	645	தொழிற்படுவதில்லை
ரங்களை	கண்டி	சீ.டீ.சீ	1,500	தொழிற்படுகின்றது

எமது தொழிற்சாலைகளின் உற்பத்திச் செலவு மிகவும் உயர்வாக இருப்பதாலும், எமது உற்பத்திகளுக்கு மிகவும் குறைந்த விற்பனை விலை கிடைப்பதனாலும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் நாளுக்கு நாள் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது.

அனுபவம் வாய்ந்த பயிற்சி பெற்ற முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை ஊழியர் குழாத்துடன் தொழிற்படும் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்படும் பச்சைக் கொழுந்துகள் மற்றும் முடிவுத் தேயிலைக்கு நடுத்தரத் தேயிலைக்கு இருக்கும் சராசரி விலையை விட குறைவான விலை இருப்பது வருந்தத்தக்கது.

மிட்லண்ட்ஸ் தொழிற்சாலை மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு CTC தேயிலைத் தொழிற்சாலையாகும் என்பதோடு கெலாபொக்கை மற்றும் ரங்களை தொழிற்சாலைகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளன.

கெலேபொக்கை தேயிலைத் தொழிற்சாலை



ரங்களை தேயிலைத் தொழிற்சாலை




மிட்லன்ட்ஸ் தேயிலைத் தொழிற்சாலை



கூட்டுத்தாபனத் தேயிலை


உள்நாட்டுச் சந்தைக்குக் கூட்டுத்தாபனத்தின் தேயிலையை வழங்குவதனூடாக கூட்டுத்தாபனத்தின் தேயிலை விலைக்கு ஏலத்தில் வழங்கப்படுகின்ற ஏற்ற இறக்கங்களால் ஏற்படும் தற்காலிக நிதிப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து ''கூட்டுத்தாபனத் தேயிலை'' (''සංස්ථා තේ'') உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது.



அட்டவணை 13 : கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை – அளவுரீதியான ஒப்பீடு (2018-2019)

மாதம்	தேயிலை விற்பனை (கிலோ கிராம்)	
	2018	2019
ஜனவரி	2,539.70	2,602.35
பெப்ரவரி	2,079.50	4,635.50
மார்ச்	3,947.65	2,789.00
ஏப்ரல்	2,156.45	939.40
மே	3,369.60	2,474.70
ஜூன்	3,502.15	1,133.70
ஜூலை	3,379.45	3,270.10
ஆகஸ்ட	4,036.70	2,683.40
செப்டம்பர்	3,663.70	3,158.50
ஒக்டோபர்	2,507.20	3,043.40
நவம்பர	2,919.30	4,313.00
டிசம்பர்	3,493.80	3,031.70
மொத்தம்	37,595.20	34,074.75


உரு 10: கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை – அளவுரீதியான ஒப்பீடு (2018-2019)



அட்டவணை 14: கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (2018-2019)

மாதம்	கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (ரூபாய்)	
	2018	2019
ஜனவரி	1,717,815.75	1,948,165.75
பெப்ரவரி	1,488,562.75	3,210,598.25
மார்ச்	2,812,306.69	2,117,156.80
ஏப்ரல்	1,602,650.75	747,592.50
மே	2,418,044.32	1,661,434.00
ஜூன்	2,609,889.00	939,404.50
ஜூலை	3,098,106.25	2,490,900.70
ஆகஸ்ட	3,141,931.85	2,080,812.75
செப்டம்பர்	2,900,447.15	2,261,769.50
ஒக்டோபர்	1,934,503.70	2,139,277.25
நவம்பர்	2,354,412.15	3,112,667.00
டிசம்பர்	2,877,599.25	2,345,363.50
மொத்தம்	**28,956,269.61**	**25,055,142.50**

உரு 11: கூட்டுத்தாபனத் தேயிலை விற்பனை வருமானம் (2018-2019)




இறப்பர் உற்பத்தி

இலங்கை அரசப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு ஒரு இறப்பர் தோட்டம் மட்டுமே சொந்தமாக இருந்தது. அது காலி மாவட்டத்தின் வலஹந்துவை பிரதேசத்தில் அமைந்துள்ளது. மூன்று வருடங்களுக்கான மொத்த இறப்பர் பால் உற்பத்தி கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 15 – மூன்று வருடங்களுக்கான மொத்த இறப்பர் உற்பத்தி

வருடம்	ஒட்டுப் பால் (கி.கி)	மொத்தச் செலவு (கி.கி)	இலாபம் / (நட்டம்) (ரூ.)	தேறிய விற்பனைப் பெறுமதி (ரூ.)	உற்பத்திச் செலவு ஒரு கிலோ கிராமுக்கு (ரூ.)	ஒரு கிலோ கிராமுக்கு இலாபம் / (நட்டம்) (ரூ.)
2019	28,122	14,686,995.72	(7,806,787.00)	300.00	522.26	(222.26)
2018	4,318	1,347,734.16	(397,747)	220.00	312.12	(92.12)
2017	42,470	5,617,931.60	(3,350,208)	123.85	132.28	(8.43)

உரு 12 – இறப்பர் உற்பத்தி (2016-2018)



திறைசேரி ஏற்பாடுகள்

கடந்த வருடங்களைப் போன்று இவ்வருடமும் பொதுத் திறைசேரியிலிருந்து சம்பளம் மற்றும் அன்றாடச் செலவுகளை முகாமை செய்வதற்காக 222 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

அட்டவணை 16 – திறைசேரி ஏற்பாடுகள்

விபரம்	2015	2016	2017	2018	2019
தொழிற்பாட்டுச் செலவுகள் (தொழிலாளர் மற்றும் ஆளணி சம்பளம்)	104	100	130	68	222
நியதிக் கொடுப்பனவுகள் (ஊ.சே.நி/ ஊ.ந.நி/ பணிக்கொடைகள்)	100	0	134	90	0
இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள்	0	0	0	0	0
மொத்த வரவு (ரூ.மி)	204	100	264	158	222


2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு, செலவு மதிப்பீடு மற்றும் 2019 ஆம் ஆண்டின் கணக்கறிக்கைக்கேற்ப நிதி நிலைமை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது

அட்டவணை 17 – 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு, செலவு மதிப்பீடு மற்றும் 2019 ஆம் ஆண்டின் கணக்கறிக்கைக்கேற்ப செயலாற்றுகை

விபரம்	2019 மதிப்பீடு	வருடாந்தக் கணக்கு - 2019	செயலாற்றுகை	2018 மதிப்பீடு	வருடாந்தக் கணக்கு - 2018	செயலாற்றுகை
உற்பத்தி செய்யப்பட்ட தேயிலை - உற்பத்திச் செலவு (C.O.P.)	460.55	549.50	119.31	425.88	445.58	104.63
- தேறிய விற்பனை சராசரி (N.S.A.)	436.12	373.70	85.69	450.94	371.22	82.32
இறப்பர் - உற்பத்திச் செலவு (C.O.P.)	287.72	429.52	149.28	299.24	420.59	140.55
(ஈ) மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தின் பேரேட்டுக்கு அமைவாக மூலதனமாக்கப்பட்ட காட்டுப் பயிர்ச் செய்கையின் மீதியும் உயிரியல் சொத்துக்களின் ஏட்டுக்கு அமைவான மீதிக்கும் இடையில் ரூபா. 192,299 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) கூட்டுத்தாபனத்தினால் பணிக்கொடைகளுக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடையைக் கணக்கிடுவதானது நிதிக் கூற்றுக்கு அமைவாகவும் கணக்காய்வாளரின் கணிப்பீட்டுக்கும் இடையில் முறையே ரூபா. 142,418,900 மற்றும் ரூபா. 75,436,147 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதிக் கூற்றுக்கு அமைவாக பணிக்கொடைக்காக செலுத்தப்பட்ட காசு மீதி மற்றும் கணக்காய்வுக்காக பிரதான அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட துணையேடுகள் மற்றும் குறிப்புக்களுக்கு அமைவாக அந்த நிலுவைகளுக்கிடையில் ரூபா. 3,489,937 பெறுமதியான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

1.2.6 **பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

(அ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. 169,015,969 பெறுமதியான கடன்பட்டோர் நிலுவைகளில், 03 மற்றும் 04 வருடங்களுக்கு இடைப்பட்ட நிலுவையானது ரூபா. 1,199,583 எனும் நூற்றுக்கு 0.7 வீதமாக இருப்பதுடன், 05 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா. 83,908,608 எனும் நூற்றுக்கு 50 சதவீதமாக இருப்பதுடன், இக் கடன் நிலுவைகளை மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்தில் மீள அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதால் அவற்றை அறவிடுவது தொடர்பாக நிச்சயமற்ற தன்மை இருந்தது.

(ஆ) 2014 ஒக்தோபர் 15 ஆம் திகதி கூட்டுத்தாபனத்தினால் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடாது ரூபா 6 மில்லியன் பெறுமதியான கடன் தொகை அல்கட்டுவ தோட்டக் கம்பனிக்கு வழங்கி இருந்ததோடு, குறித்த கம்பனி 2015 ஆம் ஆண்டிலிருந்து இக்கடனைச் செலுத்துவதை புறக்கணித்து வருவதன் காரணமாக அறவிடுவதற்கு எஞ்சியிருக்கும் நிலுவையான ரூபா. 1,916,092 வினை ஐயக்கடனாக ஒதுக்குவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 மற்றும் 2011 வருடங்களுக்குரிய ஓபல்கல தோட்டத்தின் மரங்களுக்கான விலைமனுக் கோரல் முற்பண வைப்பின் மொத்தத் தொகையான ரூபா. 786,379 வினை மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்தின் முடிவிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.2.7 **கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை**

(அ) நிதி நிலைமைக்கூற்றில் ஆதனம், பொறி, உபகரணங்களின் கீழ் இருக்கின்ற ரூபா. 1,016,872,943 பெறுமதியான சொத்துக்களுள், ரூபா. 649,377,817 பெறுமதியான காணிகள் மற்றும் ரூபா. 175,008,452 பெறுமதியான கட்டிடங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கு உறுதி ஆவணம்/ அனுமதிப் பத்திரம், மதிப்பீட்டு அறிக்கை, வரிக்கணிப்புக் கட்டண அறிக்கை போன்ற சான்றிதழ்களோ, ரூபா. 146,868,093 பெறுமதியான வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான பதிவுச் சான்றிதழோ கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதி நிலைமைக் கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகணங்களின் கீழ் முந்திய வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்டுள்ள ரூபா. 1,645,340 பெறுமதியான முகமைத்துவச் செலவுகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படும் சான்றுகள் ஏதும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு நிலையான சொத்துப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்த ரூபா. 15,906,831 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மீளாய்வு வருடத்தில் நிலையான சொத்துக்களுக்கான ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு நீக்குவதற்கு ஏதுவான காரணங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிட்டிருக்கவில்லை.

(ஈ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா. 3,314,581,133 பெறுமதியான நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் மற்றும் ரூபா. 169,202,749 பெறுமதியான தாங்கி உயிரியல் சொத்துக்கள்

என்பவற்றின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ள ரூபா.46,610,451 பெறுமதியான கடன்பட்டோர் மீதியினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் கூட்டுத்தாபனத்தில் இருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ரூபா. 58,904,418 பெறுமதியான கடன்கொடுத்தோர் நிலுவைகள், மற்றும் 21 கடன்பட்டோர் நிலுவைகளின் மொத்தமான ரூபா. 121,684,524 வினை உறுதிப்படுத்துவதற்கும் பிற்காலத்தில் அதனை தீர்ப்பனவு செய்தமைக்குமான அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 ஆம் வருடத்திற்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற, மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்திலும் நிதி நிலைமைக் கூற்றில் கடன்பட்டோர் மீதியிலிருந்து குறைத்துக் காண்பித்துள்ள தொகையான ரூபா. 47,537,070 வினை விஷேட பதிவழித்தலுக்கும் மற்றும் ரூபா. 1,591,349 வினை ஐயக்கடன் ஒதுக்கத்துக்கும் பாவித்த அடிப்படை தெளிவுபடுத்தப்படவில்லை என்பதனால் அதன் வழுவற்ற நிலைமையைப் பரீட்சிக்க முடியாதிருந்தது.

(ஏ) 2012 ஆம் வருடத்துக்கு முன்பிருந்தே இருந்து வருகின்ற ரூபா. 1,933,043 பெறுமதியான செயலற்ற கணக்கு மீதிகள் மீளாய்வு வருடத்திலும் நிதிநிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் ஏனைய செலுத்தல்கள் என காட்டப்பட்டிருந்ததுடன் இந்நிலுவையை உறுதிப்படுத்துவதற்கு தொடர்புடைய எத்தகைய ஆவணங்களோ விபரங்களோ கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2006 ஆம் வருடத்திலிருந்து 12 தோட்டங்களுக்குரிய மீள்செலுத்த வேண்டிய விலைமனுக்கோரல் வைப்புக்களின் மீதியான ரூபா. 6,379,570 நிதிக்கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் காட்டப்பட்டிருந்ததுடன், அந்நிலுவையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பணிக்கொடைக்கான ஒதுக்கீட்டு மீதியைக் கணக்கிடும் போது வேறு செலவுகள் என கழித்துள்ள ரூபா. 3,140,202 மற்றும் ரூபா. 14,525,548 பெறுமதியான பணிக்கொடைக்காக செலுத்த வேண்டிய மிகை விதிப்பனவுக் கட்டணங்களை இனங்காணப்பதற்கு ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிட்டிருக்கவில்லை.

(ஓ) பெறத்தக்க வணிக வருமானங்கள் எனும் விடயத்தில் உள்ளடக்கியுள்ள ரூபா. 3,567,597 பெறுமதியான வரவு மீதிக்கு ஏதுவான காரணங்கள் முன்வைக்கப்படாமையினால் மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் வியாபார வருமதிகளின் நிலுவையின் வழுவற்ற நிலை தொடர்பில் கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்தது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப (இ.க.நி) எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வது தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரித்துள்ளேன். எனது கருத்துரைக்கு ஒரு அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானவை என்பதும் காலோசிதமானவை என்பதும் என நம்பிக்கையாகும்.

1.3 **நிதிக் கூற்று தொடர்பாக முகாமை மற்றும் நிர்வாகத்தினைக் கொண்டு நடாத்தும் தரப்பினரின் பொறுப்புக்கள்.**

இந்நிதிக்கூற்றினை இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கேற்ப தயாரிப்பதும் அதனை நியாயமான முறையில் முன்வைப்பதும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பதும் முகாமையின் பொறுப்புக்களாகும்.

நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கான இயலுமையைத் தீர்மானிப்பது முகாமையின் ஒரு பொறுப்பாக இருப்பதுடன், முகாமை கூட்டுத்தாபனத்தைக் கலைப்பதற்கோ அல்லது வேறு மாற்று வழி ஏதும் இல்லாதபட்சத்தில் அதன் தொழிற்பாடுகளை நிறுவத்துவதற்கோ தீர்மானித்தாலே அன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான தொழிற்பாட்டினை கொண்டு நடாத்துவது என்ற அடிப்படையில் கணக்குகளை பேணுவதும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான தொழிற்படுத்துவதுடன் தொடர்புடைய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமையின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தை நிர்வகிக்கும் தரப்பினரே அதன் நிதி அறிக்கையிடல் செயற்பாடு சம்பந்தமான பொறுப்புக்களைக் கூற வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணி வரல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மொத்தத்தில், முழு நிதிக்கூற்றிலும் மோசடி அல்லது தவறினாலான அளவு சார்ந்த பிறழ்கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வாளர் அறிக்கைகையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும் குறித்த கணக்காய்வினை இலங்கைக் கணக்காய்விடல் தரநியமங்களுக்கமைவாக கணக்காய்விடும் போது, அது எப்போதும் அளவுசார்ந்த பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்தும் என உத்தரவாதப்படுத்தப்படாது. மோசடி அல்லது தவறிலிருந்தோ, தனி அல்லது கூட்டுச் செல்வாக்கினாலோ பிறழ்கூற்றுக்கள் ஏற்பட முடியுமென்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்துமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைக் கணக்காய்விடல் நியமதரங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் ஐயுறவினை பேணுகின்றேன். மேலும்,

- மோசடி அல்லது தவறு போன்ற காரணங்களால் நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய அளவுசார்ந்த பிறழ்கூற்றின் ஆபத்துக்களை அடையாளப்படுத்தும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சூழ்நிலைக்கேற்ப கணக்காய்வு ஒழுங்குவிதிகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்காக போதியளவிலான பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வது எனது கருத்துரைக்கு அடிப்படையாக இருக்கும். அளவு சார்ந்த பிறழ்கூற்றுக்களினால் இடம்பெறும் தாக்கத்தினை விட மோசடியின் விளைவினாலான தாக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருப்பதுடன், கருத்தொற்றுமை இன்மை, போலி ஆவணங்களைத் தயார்செய்தல், வேண்டுமென்றே

புறக்கணித்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மீறுதல் என்பன ஒரு மோசடி ஏற்படுவதற்கு காரணமாக அமையும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பாக கருத்தினை முன்வைக்கும் கருத்திலல்லாது, காலோசிதமான, பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளைத் திட்டமிடுவதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக ஒரு விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது,

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவமும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தேர்ச்சியான தொழிற்பாடு தொடர்பாக அளவுசார் நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது பற்றி பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமான அடிப்படையைப் பயன்படுத்தும் பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. அளவுசார் நிச்சயமற்றதன்மை இருப்பதாக நான் ஊகித்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருப்பின் எனது கருத்தை மாற்ற வேண்டியிருக்கும். எவ்வாறிருப்பினும், எதிர்கால நிகழ்வுகள் மற்றும் நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவுறலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கியுள்ள நிதிக்கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் எனபன மதிப்பிடப்பட்டதுடன், அவற்றுக்கு அடிப்படையாக இருந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்த நிதிக்கூற்றுக்களில் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுத் தேடல்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தை நிர்வகிக்கும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டன.

2. ஏனைய சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடு பற்றிய அறிக்கைகள்

2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைப்பாடுகள் குறித்து விஷேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் பாதகமான கருத்துரைக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினாலான செல்வாக்கு தவிர்த்து, கணக்காய்வுக்குத் தேவைப்படுகின்ற தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதோடு எனது பரீட்சித்தலில் தெளிவாகியது போன்று கூட்டுத்தாபனம் சரியானதொரு நிதி அறிக்கையைப் பேணி வரவில்லை.

2.1.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (இ) (III) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கூட்டுத்தாபனத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்று முந்திய வருடத்துடன் இணங்குகின்றது.

2.1.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (Iv) உறுப்புரையில் விதந்துரைத்துள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக முன்னைய வருடத்தில் நான் பரிந்துரைத்த 1.2.1 (இ), (ஈ), (ஊ),(எ), (ஏ), (ஐ), 1.2.2, 1.2.3 (இ), (ஈ), 1.2.4, 1.2.5 (அ), (ஆ), 1.2.6 (ஆ), (இ), (ஈ) மற்றும் 1.2.7 (அ), (இ), (ஈ), (எ), (ஏ), (ஐ), (ஒ) ஆகிய பரிந்துரைகள் தவிர்த்து ஏனைய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும், அவ்வாறே, அளவுசார்ந்த விடயங்களுடன் வரையறுப்பதனால், கீழே குறிப்பிடும் கூற்றுக்களைக் கூறும் அளவிற்கு எந்தவொரு விடயமும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு உறுப்பினருக்கு கூட்டுத்தாபனத்துடன் தொடர்புபட்டு ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பாக நேரடியாகவோ அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார நிலைமைகளுக்குப் புறம்பான ஏதேனுமொரு தொடர்பு இருத்தல்

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து ஏதேனுமொரு எழுத்து மூலமான சட்டத்துக்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு ஏதேனும் பொது அல்லது விஷேட ஒழுங்கு விதிமுறைகளுக்கு புறம்பாக செயற்பட்டிருத்தல்,

.	**சட்ட விதிமுறைகள்/ ஒழுங்கு முறைகளின் குறிப்பீடு**	**விபரம்**
(அ)	2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதியுடைய 01/2018 ஆம் இலக்க சொத்துக்களின் முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் 2 (அ) பந்தி மற்றும் 01/2018 ஆம் இலக்க 2015 ஆம் ஆண்டு ஜூலை 10 ஆம் திகதியுடைய அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 02 ஆம் பந்தி	கூட்டுத்தாபனத்திற்குரிய ஆனால் தற்போது பாவனைக்குத் தகாத, பாவனையிலிருந்து அகற்ற வேண்டியுள்ள 13 லொறிகள், 25 இழுவை இயந்திரங்கள் மற்றும் ட்ரோலர், 07 கார்கள், 03 ஜீப் வண்டிகள், 04 அவசர ஊர்திகள், 01 முச்சக்கர வண்டி மற்றும் 43 மோட்டார் சைக்கிள்களை 2021 ஜூலை 09 ஆம் திகதி வரை விற்றொழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	2009 நவம்பர் 13 ஆம் திகதியுடைய 438 ஆம் இலக்க அரச நிதிச் சுற்று நிருபத்தின் 02 ஆம் பந்தி	கூட்டுத்தாபனத்திற்குரிய 07 தேயிலைத் தொழிற்சாலைகள் 5 வருடம் முதல் 40 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், இவ்வாறு மூடியுள்ள தொழிற்சாலைகளில் இருக்கின்ற கட்டிடங்கள், இயந்திரங்கள், மற்றும் உபகரணங்கள் குறித்த காலத்தினுள் பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்டிருந்தாலும் அச்சொத்துக்களை விற்றொழிப்பதற்கோ அல்லது கூட்டுத்தாபனத்துக்கு வருமானம் கிடைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தவோ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(இ)	2009 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச்	வரியிடத்தக்க மொத்த விற்பனைகள் ரூபா. 3 மில்லியனை விஞ்சும் அனைத்து நிறுவனங்களும் சுயமாக பதிவு செய்துகொள்ள

	சட்டத்தின் 02 ஆம் மற்றும் 03 ஆம் உறுப்புரைகள்.	வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனம் அவ்வாறு பதிவு செய்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.
(ஈ)	நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 2 (இ) உறுப்புரை	வேறு வருமானத் தலைப்புக்களின் கீழ் கிடைக்கும் வருமானங்கள் வரியிடத்தக்கனவாக இருக்க வேண்டும் என்றிருந்தாலும், நாட்டைக் கட்டியெழுப்புதல் வரியைக் கணக்கிடும் போது ரூபா. 106,974,735 பெறுமதியான ஏனைய வருமானங்களைப் பூரணமாகக் கருத்திற்கொள்ளாமை காரணமாக ரூபா. 2,139,494 பெறுமதியான வரி செலுத்தப்படவில்லை.
(உ)	2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டத்தின் 113 ஆம் உறுப்புரை	எவரேனுமொரு ஆள் அல்லது பங்குடைமை வியாபாரம் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் காலாண்டின் நிறைவில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறையே ஆகஸ்ட் 15, நவம்பர் 15, பெப்ரவரி 15, மற்றும் அடுத்த வருடத்தின் வரிமதிப்பீட்டாண்டின் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு செலுத்தப்படாத வரி மீதி இருப்பின் அடுத்த வருடத்தின் செப்டம்பர் 30 ஆம் திகதி அதற்கு முன்பு செலுத்த வேண்டுமென்றிருந்தாலும் 2019/ 2020 மதிப்பீட்டிற்குரிய வருமான வரி 2021 ஏப்ரல் 22 ஆம் திகதி வரை செலுத்தி முடிக்காது இருந்ததுடன் வருமான வரி பொறுப்பும் கணக்கிடப்படவில்லை.
(ஊ)	2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்த) சட்டத்தின் 106 ஆம் உறுப்புரை	வருமான வரி அறிக்கையை அடுத்து வரும் வருடத்தின் நவம்பர் 30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றிருந்தாலும், கூட்டுத்தாபனம் 2019/ 2020 மதிப்பீட்டு ஆண்டுக்குரிய வருமான அறிக்கையை 2012 ஏப்ரல் 22 ஆம் திகதி வரையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(எ)	2006 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க பொருளாதார சேவைகள் கட்டணச் சட்டத்தின் 02 மற்றும் 06 ஆம் பிரிவுகள்	ஒரு காலாண்டு வருமானம் ரூபா. 10 மில்லியனை விஞ்சும் அனைத்து சந்தர்ப்பங்களும் வரிக்குட்படுதல் வேண்டும் என்றிருந்தாலும், மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் கூட்டுத்தாபனம் ரூபா. 1,339,832 பெறுமதிக்கு பொருளாதார சேவைகள் கட்டணத்தை செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், ஒரு காலாண்டு முடிவடைந்து அடுத்து வரும் மாதத்தின் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பு பொருளாதார சேவைகள் கட்டணம் செலுத்த வேண்டுமென்றிருந்தாலும், 2012 முதல் 2019 வரையான காலத்துக்கு கூட்டுத்தாபனத்தினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் உரிய கட்டணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.
(ஏ)	2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 5 (2) ஆம் பிரிவு மற்றும் 2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று நிருபத்தின் 5.1.3 ஆம் பிரிவு	நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு அடுத்த நிதியாண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற வணிக நடவடிக்கைகளை உள்ளடக்கிய வணிகத் திட்டத்தினைத் தயார்செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிரல் அமைச்சு, அரச முயற்சியாண்மை தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனத்தினால் அத்தகையதொரு அறிக்கை தயார்செய்யப்படவில்லை.
(ஐ)	2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்று	நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு நடைமுறைத் திட்டத்தினைத் தயார்செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்ற பிறகு நிரல்

	நிருபத்தின் (i) 5.1.3 உறுப்புரை	அமைச்சான பொது முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வுக்கு உட்படுத்தும் ஆண்டுக்கென நடைமுறைத் திட்டமொன்று தயார்செய்யப்படவில்லை.
	(ii) 4.2.3 மற்றும் 4.2.6 உறுப்புரைகள்	செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகளைத் தயார்செய்து அரையாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனம் குறித்தவாறான அறிக்கைகளைத் தயார் செய்திருக்கவில்லை.
	(iii) 5.2.5 ஆம் உறுப்புரை	ஒரு நிதியாண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்பு வருடாந்த செலவுத் திட்டத்தினைத் தயார்செய்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பிற்பாடு நிரல் அமைச்சான பொது முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சு, பொது முயற்சிகள் தொடர்பான திணைக்களம், திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றிருந்தாலும், 2019 ஆண்டுக்காக தயார்செய்திருந்த மூலதன வரவு செலவுத் திட்டத்தினை பணிப்பாளர் சபை 2019 பெப்ரவரி 14 ஆம் திகதி அங்கீகரித்திருந்தாலும் அது 2021 பெப்ரவரி 08 ஆம் திகதியே கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
	(iv) 6.5.1 ஆம் உறுப்புரை	ஒரு நிதியாண்டு பூர்த்தியாகி 60 நாட்களுக்குள் நிறுவனத்திற்குரிய வருடாந்த கணக்குகள் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தாலும், மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தின் கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் 2020 பெப்ரவரி 25 ஆம் திகதியே கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அப்போது கணக்கினை சமர்ப்பிக்க வேண்டியிருந்த காலம் ஒரு வருடத்தைத் தாண்டியிருந்தது.
(ஓ)	2015 ஆம் ஆண்டு ஜூலை 14 ஆம் திகதிய 3/ 2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம்	தேவை நிமித்த உப பணி முற்பணத்தைப் பெற்று குறித்த பணி பூர்த்தியடைந்து 10 நாட்களுக்குள் குறித்த உப பணி முற்பணத்தைத் தீர்க்க வேண்டும் என்றிருந்தாலும், 2019 ஆம் ஆண்டில் 14 உத்தியோகத்தர்கள் 50 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட மொத்தம் ரூபா. 342,540 ஆக இருந்ததுடன் குறித்த உப பணி முற்பணத்தை 11 முதல் 321 நாட்கள் தாமதமாகியே செலுத்தப்பட்டுள்ளது.
(ஓ)	1995 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி சனாதிபதி செயலகத்தினால்	ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட குத்தகைப் பணத்திலிருந்து நூற்றுக்கு 150 சதவீதத்தினை விட குறையாத வண்ணம் குத்தகை

	வெளியிடப்பட்ட எஸ்ஏஅய்/ஏ/01/34 ஆம் இலக்கமுடைய காணிகளின் உரிமை மாற்றம் தொடர்பான வழிகாட்டற் கோவையின் 9 (ஆ) பிரிவு	வாடகையை திருத்தியமைக்காததன் காரணமாகவும் அரச மதிப்பீட்டுப் பெறுமதியை விட குறைவான பெறுமானத்தினை வருடாந்த குத்தகை வாடகையாக தீர்மானித்துள்ளதன் காரணமாகவும், குத்தகை அடிப்படையில் ஓபல்கல தோட்டத்திலிருந்து வரையறுக்கப்பட்ட டயலொக் ப்ரோட் பேன்ட் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட 39.07 பர்ச்சஸ் பரப்பு காணியிலிருந்தும், ஹுன்னஸ்கிரிய அரச பெருந்தோட்டங்கள் மற்றும் கம்மடுவ அரச பெருந்தோட்டங்களிலிருந்து சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட காணியிலிருந்தும் மீளாய்வுக்கு உட்படுத்துகின்ற வருடத்தின் இறுதித் திகதியில் கிடைத்திருக்க வேண்டிய ரூபா. 18,482,000 குத்தகை வாடகையும் ரூபா. 2,484,000 வீதிப் பராமரிப்புப் பணமும் கூட்டுத்தாபனத்துக்கு அற்றுப்போனது.
(ஒள)	2015 ஆம் ஆண்டு 25 ஆம் திகதியுடைய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம்	MM-I வகைக்குரிய உத்தியோகத்தர்கள் வாகனப் படியைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்கள் என்றிருந்தாலும், மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் கூட்டுத்தாபனத்தினால் மூன்று உத்தியோகத்தகளுக்கு ரூபா. 1,350,000 பெறுமதியான உத்தியோகபூர்வ வாகனப் படியும் ரூபா. 224,760 பெறுமதியான எரிபொருள் கொடுப்பனவும் வழங்கப்பட்டுள்ளன.
(க)	2015 ஆம் ஆண்டு 25 ஆம் திகதியுடைய 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 3.2.1 உறுப்புரை	நிறுவனத் தலைவரின் மாதாந்த எரிபொருள் படி 170 லீற்றர்களாக இருந்தாலும், அந்த வரையறையைத் தாண்டி குறித்த வருடத்தினுள் 679 லீற்றர் எரிபொருளைப் பெற்றுக்கொண்டிருந்தாலும் அதற்காக பணிப்பாளர் சபையின் சிபார்சுடன் உரிய நிரல் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றிருக்கவில்லை.
	ஆம் 15 ஆண்டின் ஆம் 1958 இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஆம் 15 1980 உறுப்புரை மற்றும் ஆம் 46 ஆம் ஆண்டின் இலக்க ஊழியர் நம்பிக்கை (II) நிதியச் சட்டத்தின் பிரிவு .(1) 16 இன் உபபிரிவு	2006 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு வருடத்தின் இறுதித் திகதி வரையில் ரூபா. 421,921,940 பெறுமதியான ஊழியர் சேமலாப நிதியப் பொறுப்பினையும் ரூபா. 14,390,082 பெறுமதியான ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பினையும் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன், அதன் விளைவாக 2019 ஆம் ஆண்டாகும் போது கூட்டுத்தாபனத்துக்கு ரூபா. 43,225,912 பெறுமதியான மிகை விதிப்பு விதிக்கப்பட்டிருந்தது.
	1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைகள் செலுத்துதல் சட்டத்தின் ii ஆவது பகுதியின் (5) (1) உப பிரிவு	ஒரு உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் சென்ற அல்லது மரணித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடைகள் செலுத்தப்பட வேண்டுமென்றிருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு பணிக்கொடைகள் செலுத்தப்படாமையினால் 2019 வருட இறுதியில் ரூபா. 14,525,548 மிகை விதிப்பு விதிக்கப்பட்டிருந்தது.

2.2.3 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளுடன் இணங்காத விதத்தில் செயற்பட்டிருத்தல்.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) உறுப்புரையில் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக கீழே குறிப்பிடுகின்ற அவதானிப்புக்கள் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனுடனும், விளைத்திறனுடனும், குறிப்பிட்ட காலத்தினுள் உரிய சட்ட விதிமுறைகளுக்கேற்ப கொள்வனவு செய்து பாவிக்கப்படவில்லை.

(அ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டற் கோவையின் 4.2.1 (ஆ) எனும் உறுப்புரையின் பிரகாரம், குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கான உத்தேச பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய பெறுகைத் திட்டமொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விலை மனுக்கள் கோராது தலைவரின் பயன்பாட்டுக்காக ரூபா. 890,680 பணம் செலுத்தி 2019 பெப்ரவரி 23 ஆம் திகதி முதல் 2019 டிசம்பர் 06 வரையான காலத்துக்கு வாகனமொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) அரச பெறுகை வழிகாட்டற் கோவையின் 7.12.2 (அ) உறுப்புரையின் பிரகாரம், ஒரு விலைமனு மாத்திரம் கிடைக்கும் பட்சத்தில் அதனை சந்தைப் பெறுமதியுடன் ஒப்பீடுசெய்து விலை மனு விலை நியாயமாக இருப்பின் அந்த விலை மனு செல்லுபடியாகுமென கூறப்பட்டிருந்தாலும், கூட்டுத்தாபனத்திற்குத் தேவைப்படுகின்ற 120 லீற்றர் இரசாயனப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு வழங்குநர் மாத்திரம் ரூபா. 207,000 பெறுமதியான விலை மனு முன்வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அப்பெறுமதியினை சந்தைப் பெறுமதியுடன் ஒப்பீடு செய்யாது குறித்த வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

(ஈ) 2017 முதல் 2019 வரை செயற்பாட்டுப் பணிப்பாளருக்கென பெற்றுக்கொண்டுள்ள 03 வாகனங்களுக்காக ரூபா. 2,740,890 வினை வாடகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களின் பெறுகை நடைமுறை சம்பந்தமாக கீழே குறிப்பிடுகின்ற குறைபாடுகள் மற்றும் ஒவ்வாமைகள் அவதானிக்கப்பட்டன. விலை மனு கோருவதற்காக வழங்குநர்களைத் தெரிவுசெய்யும் போது பதிவுசெய்த வழங்குநர்களிலிருந்தோ அல்லது பெறுகை வழிகாட்டற் கோவையின் 3.4.4 ஆம் வழிகாட்டல்களின் படி *Yellow pages* அல்லது *Rainbow pages* என்பவற்றிலிருந்தோ வெளிப்படைத் தன்மையுடன் வழங்குநர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், விலைமனு கோரல் ஆவணமொன்று தயார்செய்யப்படவில்லை என்பதுடன், 3.4.2 (அ) பெறுகை வழிகாட்டலுக்கேற்ப குறித்த சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது இருக்க வேண்டிய நிபந்தனைகள் பற்றி தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அறிவித்ததற்கான எவ்விதமான குறிப்புக்களும் இருக்கவில்லை என்பதுடன், விலைமனு கோரல் கடிதங்கள் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது 6.3.1 பெறுகை வழிகாட்டலின் படி வேறு ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகளில் அனுப்பப்பட்டிருக்கவில்லை என்பதுடன், விலை கோரியிருந்த நிறுவனங்கள் அல்லது நபர்கள் தமது விலைகளை பதிவுத் தபாலில் அனுப்பியிருக்கவில்லை என்பதுடன், 6.3 (அ) ஆம் பெறுகை வழிகாட்டலுக்கேற்ப முத்திரையிட்ட விலைமனு கோரல் பெட்டியில் இட்டிருக்கவில்லை என்பதுடன், 6.3.3 ஆவது பெறுகை வழிகாட்டலுக்கேற்ப குறித்த விலைமனுக்கள் பகிரங்கமாக திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்குப் பதிலாக தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவாக பெறுகைக் குழு செயற்பட்டிருந்தது. KH 1932 இலக்க வாகனத்தை வாடகைக்கு அமர்த்தும் போது தெரிவுசெய்த விலைமனுதாரர்கள் முன்வைக்கப்பட்ட விலை மனுக்கள் தவிர்த்து ஏனைய இரண்டு விலை மனுக்களும் போலியான விலை மனுக்கள் என கணக்காய்வின் போது உறுதியாகியுள்ளது. இரண்டு சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுக்களில் ஒரே நபரின் ஒப்பங்களில் கருத்திற்கொள்ளத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. இவ் விலை மனுக்களில் தொலைபேசி இலக்கங்கள் குறிப்பிட்டிருக்கவில்லை. அத்துடன், இவ்விலைமனுக்களில் குறிப்பிட்டிருந்த முகவரிகளும் போலியானவை என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த விலை மனுக்களில் குறிப்பிட்டிருந்த வாகனங்களின் இலக்கங்களைப் பரீட்சிக்கும்

போது குறித்த இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள் இவ்விலை மனுதாரர்களின் வாகனங்களல்ல என்றும் வேறு நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு உரித்தான வாகனங்கள் என்றும் உறுதியாகியது.

(உ) கூட்டுத்தாபனத்தின் நிலையான வைப்புக்களை மதிப்பீடு செய்வதற்காக தேசிய போட்டி ரீதியான விலைமனு முறை பின்பற்றப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டற் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் படி விலைமனு கோரலுக்கான குறைந்தபட்ச காலம் 21 நாட்கள் என்றிருந்தாலும், ஒப்பந்தக்காரர்களுக்கு 14 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவுக்கு மூன்று உத்தியோகத்தர்கள் சமூகமளித்திருந்தாலும், குறித்த மூன்று உத்தியோகத்தர்களுள் ஒருவர் ஒப்பமிட்ட திகதி குறிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டாளர் பெறுகை வழிகாட்டற் கோவையின் 5.3.11 இன் பிரகாரம் விலைமனுப் பிணை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுகை வழிகாட்டற் கோவையின் 8.9.1 (ஆ) இன் பிரகாரம் இரு தரப்பினர்களுக்கும் இடையில் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றும் கைசாத்தாகவில்லை.

(ஊ) களுத்துறை மாவட்டக் காணிகளைத் துண்டுகளாகப் பிரிப்பதற்கு விலை மனு கோருவதற்காக தேசிய போட்டி விலை மனு முறை பின்பற்றப்பட்டிருந்ததுடன், பெறுகை வழிகாட்டற் கோவையின் 6.2.2 வழிகாட்டலின் படி விலை மனு கோரலுக்கான குறைந்தபட்ச காலம் 21 நாட்கள் என்றிருந்தாலும், விலை மனுக்களை முன்வைப்பதற்கு 14 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும், வழிகாட்டற் கோவையின் 5.3.11 இன் பிரகாரம் விலைமனுதாரர்களினால் விலைமனுப் பிணை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், பெறுகை வழிகாட்டற் கோவையின் 8.9.1 (ஆ) இன் பிரகாரம் இரு தரப்பினர்களுக்கும் இடையில் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்று கைசாத்தாகவில்லை என்றும் தெளிவாகியது. மேலும், தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரர் குறித்த அளப்பனவு நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக கூறி உடன்பட்ட பணத்தொகையை வழங்குமாறு கோரியிருந்தாலும் பெறுகை வழிகாட்டற் கோவையின் 8.12.4 இன் பிரகாரம் குறித்த சேவை தொடர்பாக ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக அளப்பனவு நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக முறையானதொரு சான்றிதழ் நிலையத்துக்குப் பொறுப்பாக செயற்படும் உத்தியோகத்தரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கோமரைத் தோட்டத்தின் நீர் வழங்கல் முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக விலை மனு கோரும் போது பெறுகை வழிகாட்டற் கோவையின் 6.3.6 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விலைமனுவினை திறப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும், பெறுகை வழிகாட்டற் கோவையின் 7.11.1 இல் குறிப்பிட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கேற்ப விலைமனு மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்படவில்லை என்றும் வேலைகளைப் பூர்த்திசெய்த பெறுகைகள் தொடர்பாக பெறுகை வழிகாட்டற் கோவையின் 8.12.2 பிரிவின் பிரகாரம் வேலைகளைப் பூர்த்திசெய்துள்ளமை தொடர்பான ஆவணங்கள் இருக்கவில்லை என்றும் அவதானிக்கப்பட்டது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புரைகள்

3.1 செயலாற்றுகை

(அ) பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக, 2019 ஆண்டில் இலங்கையில் ஒரு ஹெக்டயருக்கான வருடாந்த தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1482 கிலோ கிராமாக இருந்தாலும், கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 13 தோட்டங்களில் குறித்த விளைச்சல் 174 முதல் 727 கிலோ கிராமுக்கு இடைப்பட்ட மிகவும் குறைவாகவே இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்துக்கு 4222 ஹெக்டயர் நிலப்பரப்புத் தேயிலைப் பயிர்ச்செய்கை உரித்தாக இருந்தாலும், அவற்றுள் 2883 ஹெக்டயர் 100 வருடங்களை விட பழைய தேயிலைப் பயிர்ச்செய்கை ஆகும். மேலும், 135 ஹெக்டயர் பரப்பில் மீண்டும் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

(இ) கூட்டுத்தாபனத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கு ஏற்ப, 2017 முதல் 2018 வரை கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 13 தோட்டங்களுள் 11 தோட்டங்களின் தேயிலை நாற்றுக்களின் உற்பத்தி அதிகரிக்கும் போது அலகொல்ல, கல்பில்ல, கோமரை, ஹுன்னஸ்கிரிய மற்றும் கெலேபொக்க ஆகிய ஐந்து தோட்டங்களின் நாற்றுக்களின் உற்பத்தி முறையே நுற்றுக்கு 1 மற்றும் 9 எனும் வீதத்தில் குறைந்துள்ளதுடன், 2018 – 2019 காலப் பிரிவில் கூட்டுத்தாபனத்தின் அனைத்துத் தோட்டங்களின் உற்பத்தி நூற்றுக்கு 2 முதல் 33 வீதம் வரையில் குறைந்திருந்தது. மொத்த உற்பத்தியானது 170,762 கிலோ கிராமினால் அதாவது 11.58 சதவீதத்தினால் குறைந்திருந்தது.

(ஈ) வெளித் தோட்டக்காரர்களுக்கு வழங்கியிருந்த 1391 ஹெக்டயர் நிலப் பரப்பிலிருந்து உற்பத்தி செய்திருந்த மொத்த தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி 2018 ஆம் ஆண்டில் 102,507 கிலோ கிராமாக இருந்ததுடன், அது 2019 ஆம் ஆண்டில் 99,850 கிலோ கிராமாக இருந்ததுடன், பெருந்தோட்ட அமைச்சினால் முன்வைக்கப்பட்டிருந்த தேயிலைத் தொழிற்சாலையின் தரவுகளுக்கு அமைவாக குறித்த நிலப்பரப்பின் வருடாந்த நியம தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி 2,061,462 கிலோ கிராமாக இருக்க வேண்டுமென்றிருந்தாலும் வெளித் தோட்டக்காரர்கள் ஒட்டுமொத்த விளைச்சலின் வெறும் நூற்றுக்கு 5 சதவீதத்தினை மாத்திரம் உற்பத்தி செய்தமை கருத்து முரண்பாட்டுக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(உ) குடித்தொகை மற்றும் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் 2018/2019 வருடம் தொடர்பாக வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அமைவாக இலங்கையில் ஒரு கிலோ கிராம் தேயிலைக்கான சாதாரண உற்பத்திச் செலவு ரூபா. 484 ஆக இருக்க வேண்டுமென்றிருப்பினும் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 11 தோட்டங்களின் ஒரு கிலோ கிராமுக்கான தேயிலை உற்பத்திச் செலவு ரூபா. 416 – 783 க்கும் இடைப்பட்டதாகவே இருந்தது. மேலும், வரவு செலவுத் திட்ட அறிக்கைகளின் படி ஒரு கிலோ கிராம் தேயிலையின் மதிப்பீட்டு உற்பத்திச் செலவு ரூபா. 461 ஆக இருந்தாலும் அதன் உண்மையான உற்பத்திச் செலவு ரூபா. 605 ஆகும்.

(ஊ) 2019 வருடம் தொடர்பாக தேயிலை ஏற்றுமதிச் சபையினால் இணையத்தில் பதிவேற்றியுள்ள தரவுகளுக்கு அமைவாக ஒரு கிலோ கிராம் தேயிலைக்கான சாதாரண விற்பனைப் பெறுமதி ரூபா. 550 ஆக இருக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்தாலும், கூட்டுத்தாபனத்தின் இப்பெறுமதியானது ரூபா. 340 முதல் ரூபா. 415 க்கு இடைப்பட்டதாக குறைவாகவே இருந்தது.

(எ) கூட்டுத்தாபனத்தின் 13 தோட்டங்களின் மொத்த நிலப்பரப்பு 11,132 ஹெக்டயராக இருந்தாலும், அதில் தேயிலைக்காக 4,223 ஹெக்டயர் நிலமும் இறப்பருக்காக 2,577 ஹெக்டயர் நிலமும் பயன்படுத்தப்பட்டன. எஞ்சியுள்ள 4332 ஹெக்டயர் நிலம், அதாவது நூற்றுக்கு 33 வீதமான நிலம் வருமானம் உழைத்துத் தரும் எத்தகைய நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படவில்லை.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் தேயிலை உற்பத்திக்கான 4223 ஹெக்டயர் நிலப்பரப்பிலிருந்து வருடாந்தம் 6,273,306 கிலோ கிராம் தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்திசெய்ய வேண்டுமென்றிருந்தாலும் கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்திருந்த தயாரிக்கப்பட்ட தேயிலையின் அளவு 1,402,979 கிலோ கிராமாகும். அதாவது, நூற்றுக்கு 22 வீதம் எனும் மிகவும் திருப்திகரமற்ற விளைச்சலாகும்.

(உ) மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் ஒவ்வொரு தோட்டங்களுக்கும் வழங்கியிருந்த உற்பத்தி இலக்குகளினுள் கோமரை மற்றும் கல்பில்ல எனும் தோட்டங்கள் தவிர்த்து எஞ்சியுள்ள அனைத்து தோட்டங்களின் செயலாற்றுகை 75 சதவீத்தினை விட குறைந்த மட்டத்தில் இருந்ததுடன், ஹெயார்பார்க் மற்றும் சைதலாவை தோட்டங்களின் செயலாற்றுகை 45 வீதத்தினை விட குறைவாகவே இருந்தது. ஏனைய ஒன்பது தோட்டங்கள் நூற்றுக்கு 50 முதல் 68 க்கு இடைப்பட்ட குறைந்த செயலாற்றுகையினையே காண்பித்ததன.

(ஊ) மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் உரக் கொள்வனவுக்காக வரவு செலவுத் திட்டத்திலிருந்து ரூபா. 60 மில்லியன் ஒதுக்கியிருந்தாலும் உண்மையில் வெறும் ரூபா. 3.56 மில்லியனே செலவிடப்பட்டிருந்தது. இது மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் 6 சதவீதம் மாத்திரமே.

(எ) 2013 ஆம் ஆண்டில் ரூபா. 852,397 ஆக இருந்த இலாபம், 2014 ஆம் ஆண்டில் ரூபா. 3,177,798 நட்டம் வரை மாற்றமடைந்திருந்ததுடன், 2019 ஆம் ஆண்டில் குறித்த நட்டம் ரூபா. 7,817,916 வரை அதிகரித்திருந்தது.

(ஏ) இத்தொழிற் துறையின் நியமங்களுக்கு ஏற்ப வஹலந்துவை தோட்டத்தில் 65 ஹெக்டயர் நிலப் பரப்பில் கிட்டத்தட்ட 32,500 இறப்பர் செடிகள் இருக்க வேண்டுமென்றிருந்தலும், அதில் 18,634 இறப்பர் செடிகளே இருந்தன. அது இருக்க வேண்டிய அளவின் 57 சதவீதமாகும். அத்துடன், 2019 இல் ஒரு ஹெக்டயரின் சாதாரண இறப்பர் உற்பத்தி 667 கிலோ கிராமாக இருக்க வேண்டுமென்றிருந்தாலும் வஹலந்துவை தோட்டத்தின் சாதாரண இறப்பர் உற்பத்தி 432 கிலோ கிராம் ஆகும். இது சராசரி உற்பத்தியின் நூற்றுக்கு 65 வீதத்திலும் குறைவானதாகும்.

3.2 ஆளணி நிர்வாகம்

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2017 ஜூலை 25 ஆம் திகதிய, 2017 ஒக்டோபர் 13 ஆம் திகதிய, 2018 டிசம்பர் 21 ஆம் திகதிய மற்றும் 2019 ஒக்டோபர் 09 திகதிய கடிதங்களின் பிரகாரம், 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத்தாபனத்தின் பிரதான காரியாலயத்தில் நிரந்தர பதிவியில் 15 வெற்றிடங்கள் இருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக 02 பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் 11 பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்கப்பட்டிருப்பதுடன், 2 பதவிகளுக்கான வெற்றிடமும் இன்னும் 02 பதவிகளுக்கு தற்காலிக வெற்றிடமும் இருந்துள்ளன. இதற்கு மேலதிகமாக, ஒப்பந்த ஆளணி 03 ஆக இருந்தாலும் ஆளணிக்கு மேலதிகமாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த 09 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் ரூபா. 2,736,095 சம்பளம் மற்றும் வேதனம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) தாபன விதிக்கோவையின் 11 ஆம் உறுப்புரையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம், ஏதாவதொரு பதவியில் வெற்றிடம் ஏற்படுமிடத்து உடனே அப்பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றிருப்பினும், 2008 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாக இருந்து வருகின்ற முகாமையாளர் – சட்டம், மற்றும் பிரதி ஆணையாளர் – பெருந்தோட்டங்கள் எனும் பதவிகளில் நிரந்தர உத்தியோகத்தர்களை நியமிக்காது ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2019 ஆம் வருடத்தில் முறையே ரூபா. 350,773 மற்றும் ரூபா. 377,735 சமபளம் வழங்கப்பட்டுள்ளது.

(இ) 2018 ஆம் ஆண்டு 18 ஆம் திகதியுடைய 3/2018 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் II ஆம் பந்தியின் பிரகாரம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி செயற்பாட்டுப் பணிப்பாளர், ஆலோசகர், இலிகிதர்கள், தொழிலாளர்கள் என பதவிகளுக்கு ஒப்பந்த மற்றும் நிரந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்திருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வு வருடத்தில் ரூபா. 4,321,049 சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி பிரதான அலுவலகத்தில் 07 ஆட்சேர்ப்பும் 02 பதவியுயர்வும் செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு ரூபா. 2,934,690 சம்பளம் மற்றும் வேதனம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) 2003 ஜூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.3.1 பந்தியின் பிரகாரம் ஏதேனுமொரு பதவிக்கு ஆட்சேர்ப்புக்கு இருக்க வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை உள்ளடக்கிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறை கூட்டுத்தாபனத்திற்கு இருக்கவில்லை.

(ஊ) தாபன விதிக்கோவையின் VII ஆம் உறுப்புரையின் 10.2 உப பிரிவின் பிரகாரம் வேதனேற்றம் செலுத்துவதை மறுக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து ஏனைய அனைத்து சந்தரப்பங்களிலும் 10.1 உப பிரிவின் பிரகாரம் வேதனேற்றத் திகதிக்குரிய வருடத்தின் வேதனேற்றத்தினை உழைத்துக்கொள்ள வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. என்றாலும், இதற்கு முரணாக முகாமையினால் எவ்விதமான மதிப்பீடும் இன்றி 2017, 2018 மற்றும் 2019 வருடங்களில் 01 வேதனேற்றத்திற்குப் பதிலாக அதிகமான வேதனேற்றங்கள் வழங்கப்பட்டிருப்பதாக கணக்காய்வின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளிலிருந்து தெளிவாகியதுடன், இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபன ஆளணியினருள் 27 உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 1,253,223 வேதனேற்றம் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) தாபன விதிக்கோவையின் II ஆவது உறுப்புரையின் 3 ஆம் உப பிரிவின் பிரகாரம் அரச சேவையின் அனைத்து வெற்றிடங்களுக்கும் நியமன அதிகாரியினால் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கேற்ப பகிரங்க அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட வேண்டுமென்றிருந்தாலும், மீளாய்வு வருடத்தில் கூட்டுத்தாபனத்தினால் பகிரங்க விண்ணப்பங்களைக் கோராது 23 நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.3 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) 09 தோட்டங்களின் 782 பேர்ச்சஸ் நிலப் பரப்பிலும் 05 உத்தியோகபூர்வ இல்லங்களிலும் கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் சட்டரீதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருப்பதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஓபல்கல தோட்டத்திற்குரித்தான 39.07 பர்ச்சஸ் காணி டயலொக் ப்ரோட்பேண்ட் தனியார் கம்பனிக்கு அரச மதிப்பீட்டினை விட குறைவான பெறுமதியில் வழங்கியுள்ளதனால் மீளாய்வுக்கு உட்படுத்தும் வருடத்தில் அதன் நட்டம் ரூபா. 712,500 ஆக இருந்துள்ளதுடன், உப குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதனால் கிடைக்க வேண்டிய ரூபா. 427,500 வினை கூட்டுத்தாபனம் இழந்துள்ளது.

(இ) 1996 ஆம் ஆண்டிலிருந்து சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்கியுள்ள ஹுன்னஸ்கிரிய அரச தோட்டத்தின் 02 ரூட் 01 பர்ச்சஸ் பரப்புள்ள காணி மற்றும் கம்மடுவை அரச தோட்டத்தின் 02 ரூட் 2.87 பர்ச்சஸ் பரப்புள்ள காணி தொடர்பாக உடன்படிக்கைகள் கைச்சாத்திருக்கவில்லை.

(ஈ) பயணம் முடிவடைந்த பிறகு பயணம் செய்த உத்தியோகத்தர்கள் வாகன ஓட்டக் குறிப்பில் ஒப்பமிடாதிருந்ததுடன், அன்றாட ஓட்டக் குறிப்புக்களில் அன்றாட எரிபொருட் பாவனையை சமப்படுத்த வேண்டுமென்றிருந்தாலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்களில் எரிபொருள் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

ஒப்பம்
டப்.பீ.சீ விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் ஆந் திகதியுடன் முடிவடைந்த 31 ஆண்டிற்கான நிதிக் கூற்று, சட்டம் மற்றும் கண்காணிப்புத் தேவைப்பாடுகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டுஆம் 19 இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஆவது 12 பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக நிறுவனத்தினால் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள்.

1.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

(அ) 2019.12.31 **ஆம் திகதிக்குரிய நிதி நிலைமைக் கூற்றில் குத்தகைக்கு விட்டுள்ள காணிகள் எனும் தலைப்பின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா.** *649,377,816.36* **பெறுமதியான தொகையில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

தோட்டம்/ பிரதான காரியாலயம்	**விபரம்**	**கணக்குகளின் சேர்க்கப்பட்ட வருடம்**	**பெறுமதி ரூபா. சதம்**
வலஹந்துவை	காணியின் பெறுமதி	2012	620,000,000.00
அலகொல்லை	காணி அபிவிருத்திச் செலவு	1996	1,782,168.12
தொடகக	,,	1996	1,439,934.95
கல்பிஹில்லை	,,	1996	1,247,732.90
கோமரை	,,	1996	2,562,873.16
ஹாகலை	,,	1996	2,291,138.59
ஹெயாபார்க்	,,	1996	1,436,449.45
ஹுன்னஸ்கிரிய	,,	1996	903,048.77
கெலேபொக்கை	,,	1996	6,621,281.82
மிட்லன்ட்	,,	1996	3,062,644.36
ஓபல்கலை	,,	1996	1,772,601.24
ரங்கலை	,,	1996	2,226,098.34
பிரதான காரியாலயம்	காணியின் பெறுமதி	1996	4,031,845.00
மொத்தப் பெறுமதி			649,377,816.36

மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களுக்கமைவாக வஹலந்துவைத் தோட்டத்தினை 2021 ஆம் ஆண்டில் ரூபா. 620 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், பல வருடங்களாக கூட்டுத்தாபனம் எதிர்கொண்டுள்ள நிதி நெருக்கடிகளின் காரணமாக ஏனைய காணிகளை மதிப்பீட செய்ய முடியவில்லை. இந்த இடங்களை மதிப்பீடு செய்வதற்குத் தேவைப்படுகின்ற பணத்தினை திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான கடிதங்கள் பெருந்தோட்ட அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த பணம் கிடைத்ததும் இந்நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(ஆ) கடந்த காலத்திலிருந்து தோட்டங்களுக்கென கொள்வனவு செய்த கணிணிகள், உபகரணங்கள் மற்றும் தளாபட பொருட்கள் என்பவற்றின் பெறுமதிகள் ஒரு கணக்கில் காட்டப்பட்டுள்ளதால் இப்பிரச்சினை எழுந்துள்ளது. எனவே,

இச்சொத்துக்களை வெவ்வேறாக இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றில் அவ்வாறு வெவ்வேறாக காட்டப்படும்.

(இ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குரிய காணிகளை பிரதேசத் தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விடும் போது நடாத்தப்பட்டுள்ள மதிப்பீட்டின் பிரகாரம், அந்தக் கம்பனிகளின் ஐந்தொகைகளில் குறித்த ஆதனங்களின் பெறுமதிகள் காட்டப்பட்டுள்ளதோடு அப்பெறுமதிகள் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களில் முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் பிரதேசத் தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு விட்டுள்ள காணிகள் தொடர்பான விபரம் 2022 வருடத்திற்கான நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது வெளிப்படுத்தப்படும் என அறியத்தருகின்றேன்.

(உ) விவசாய நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தாங்கி உயிரியில் சொத்துக்களின் பெறுமதியை 2022 நிதிக்கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் எனும் விடயத்தின் கீழ் முன்வைக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஊ) 2021 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றினைத் தயாரிக்கையில் தேயிலை மீள்நடுகைக்காக 2021 ஆம் ஆண்டில் உறப்பட்ட செலவினங்களை முதிர்ச்சியடையாத பயிர்ச்செய்கையின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது 2020 மற்றும் 2021 க்கு முந்திய வருடங்களில் தேயிலை மீள்நடுகைக்காக உறப்பட்ட செலவினங்களை உரியவாறு வகைப்படுத்திக் காட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றேன்.

(ஐ) 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது காட்டுப் பயிர்ச்செய்கையை உயிரியல் சொத்துக்களின் கீழ் காட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஒ) 2021.12.31 ஆம் திகதி வரையில் நிறுவனத்தினால் பெற்றுக்கொண்டுள்ள வங்கி மேலதிகப் பற்று மற்றும் வங்கிக் கடனுக்காக பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் 2021 நிதிக் கூற்றினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஓ) 2022 வருடத்திற்குரிய நிறுவனத்தின் சேவை அனுகூலங்களைக் கணக்கிடும் போது ஆயுட்காலத்தை கணக்கிடும் முறையைப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

1.2.2 <u>கணக்கீட்டுக் கொள்கைகள்</u>

2022 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம். அத்துடன், 2019 ஆம் ஆண்டில் நுகரத்தக்க உயிரியல் சொத்துக்களென கணக்கு வைக்கப்பட்டுள்ள நிலுவை பெறுமதியை 2022 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மீண்டும் சீர்செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகின்றேன்.

1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) குத்தகை வாடகை வருமானங்களை கணக்கு வைக்கும் போது இடம்பெற்றுள்ள குறைபாடுகளைப் பரீட்சித்து அதற்கேற்ப நிறுவனத்தின் திரண்ட தேறிய நட்டத்திற்கு ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினை கணக்கிட்டு, உரிய சீராக்கல்கள் 2022 வருடத்திற்கான நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படுமென தயவுடன் அறியத்தருகின்றோம்.

(ஆ) தோட்டங்களில் இருக்கின்ற தேயிலை, உரம் மற்றும் இரசாயனப் பொருட்கள் போன்ற அனைத்து இருப்புக்களையும் பௌதீக ரீதியாக உறுதிப்படுத்தி 2021 நிதிக் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

(இ) தோல்வியடைந்துள்ள தேயிலை நாற்று நடுகை தொடர்பாக 2022 ஆம் ஆண்டில் பரீட்சித்துப் பார்த்து பணிப்பாளர் குழுவின் அனுமதியின் அடிப்படையில் குறித்த கணக்குகளின் சீராக்கல் செய்யப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஈ) 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இக்கணக்கீட்டு வழுக்கல் சரிசெய்யப்படும்.

(உ) 2019 ஆம் ஆண்டில், தொழிலாளர்களின் சம்பளக் கொடுப்பனவு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் திருத்தப்பட்டதன் காரணமாக தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் ரூபா.500 இலிருந்து ரூபா. 700 வரை அதிகரித்ததனால் முந்திய வருடங்களுக்குரிய பணிக்கொடை ஒதுக்கம் தொடர்பாக சீராக்கல் செய்யப்பட்டது. எனவே, குறித்த கணக்கு வைப்பு சரியானதென அறியத்தருகின்றேன்.

(ஊ) கூட்டுத்தாபனம் பல காலமாக முகங்கொடுக்கின்ற நிதிப் பிரச்சினைகளின் காரணமாக தேயிலை விற்பனை வருமானத்தின் மீது செலுத்த வேண்டிய நாட்டைக் கட்டியெழுப்பும் வரிப் பணத்தினை தீர்க்க முடியாமல் போனது என்பதை தயவுடன் அறியத்தருகின்றோம்.

1.2.4 இணக்கமற்ற நிர்வாகக் கணக்குகள்

(அ) உள்ளகத் தோட்ட நிர்வாகக் கணக்குகளில் வரவு மற்றும் செலவு நிலுவைகளில் அவதானிக்கப்பட்ட இந்த வித்தியாசத்தினைப் பரீட்சித்து 2022 ஆம் ஆண்டில் தேவையான கணக்குச் சீராக்கல்களை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறேன்.
(ஆ) பிரதான அலுவலகம் மற்றும் தோட்டங்களின் நடைமுறைக் கணக்குகளில் இருக்கின்ற மாற்றங்களைப் பரீட்சித்து 2022 ஆம் ஆண்டில் தேவையான கணக்குச் சீராக்கல்களை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

1.2.5 விவரிக்கப்படாத வித்தியாசங்கள்

(அ) 2021.12.31 ஆம் திகதிக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் மீதிக்கு ஏற்ப குறித்த திகதிக்குரிய நிதி நிலைமைக் கூற்று தயார்செய்யப்பட்டுள்ளதுடன், அதனுடன் பொருந்தும் விதத்தில் நிலையான சொத்துக்களின் உப பட்டியலும் தயாரிக்கப்படுள்ளது.

(ஆ) இக்கணக்காய்வுத் தவறு 2021 நிதிக் கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) இக்கணக்காய்வுத் தவறு 2021 நிதிக் கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) இக்கணக்காய்வுத் தவறு 2021 நிதிக் கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது.

(உ) இக்கணக்காய்வுத் தவறு 2021 நிதிக் கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது.

(எ) கூட்டுத்தாபனத்தின் பணிக்கொடை ஒதுக்கல்கள் மற்றும் செலுத்த வேண்டிய பணிக்கொடைத் தொகையை கணிப்பிடும் போது நிகழ்ந்துள்ள தவறை 2021 நிதிக் கூற்றினைத் தயார்செய்யும் போது சரிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறேன்.

(ஏ) பணிக்கொடைச் செலுத்தல்கள் சம்பந்தமாக 2019 நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பணத் தொகை சரியானது என்பதுடன் உப பட்டியல்களில் காணப்பட்ட இத்தகைய குறைபாடுகளுள் கருத்திற்கொள்ளத்தக்க குறைபாடுகள் 2021 இல் சரிப்படுத்தப்பட்டுள்ளன.

1.2.6 பெறத்தக்க மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) அறவிட முடியா கடன்படுநர் தொடர்பான தகவல்களைக் கணடறிவதற்காக தற்போது உத்தியோகத்தர் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த விபரங்கள் கிடைக்கப்பெற்ற பிறகு அப்பணத் தொகையை அறவிடுவது தொடர்பாகவோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பது தொடர்பாகவோ பரிந்துரைகளை முன்வைப்பதற்காக இன்னொரு குழுவினை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரை சம்பந்தமாக பணிப்பாளர் குழுவின் தீர்மானங்களுக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஆ) 2014.10.15 ஆம் திகதிக்குரிய காலப்பகுதியில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட அல்கடுவை பெருந்தோட்ட கம்பனி ஆகிய இரண்டு நிறுவனங்களும் ஒரு தலைவரின் கீழ் இருந்ததுடன், அப்போது வரையறுக்கப்பட்ட அல்கடுவை பெருந்தோட்ட கம்பனியில் ஏற்பட்ட நிதி ரீதியான நெருக்கடிகளின் காரணமாக தலைவரின் அனுமதியின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அல்கடுவை பெருந்தோட்ட கம்பனிக்கு ரூபா. 6 மில்லியன் வழங்கப்பட்டது. அந்தப் பணத்தொகையில் ரூபா. 4.5 மில்லியன் மீள்செலுத்தப்பட்டதுடன் எஞ்சியுள்ள ரூபா. 1.5 மில்லியன் இது வரையில் செலுத்தப்படவில்லை. அதே போன்று. 2015 ஆம் ஆண்டு இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் ஓட்டுநர் ஒருவர் வரையறுக்கப்பட்ட அல்கடுவை பெருந்தோட்ட கம்பனிக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதோடு அதற்காக வரையறுக்கப்பட்ட அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய தொகை ரூபா. 416,092 ஆகும். அந்த வகையில் வரையறுக்கப்பட்ட அல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியிலிருந்து கிடைக்க வேண்டிய மொத்த தொகை ரூபா. 1,916,092 ஆக இருப்பதுடன் அத்தொகையை அறவிடுவதற்கு உதவுமாறு நிரல் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது.

(இ) SLSPC/PL/TB/T-88/2010 மற்றும் SLSPC/PL/TB/T-88/2011 இலக்க மர விற்பனையுடன் தொடர்புடைய விலைமனு கோரலுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட மீள செலுத்த வேண்டிய பணத் தொகையை மீள செலுத்தாதிருந்தமைக்கான காரணம் யாதெனில் குறித்த வர்த்தகர்கள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையாகும். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்ட பிறகு குறித்த கொடுப்பனவுகளை செலுத்துவதற்கோ அல்லது குறித்த பணத்தை கூட்டுத்தாபனத்தின் ஒரு வருமானமாக கணக்கு வைப்பதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

1.2.7 கணக்காய்விற்கான சான்றுகள் காணப்படாமை

(அ) கூட்டுத்தாபனத்திலுள்ள காணிகள், கட்டிடங்கள் மற்றும் வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களை உள்ளடக்கிய கோவை தற்போது தயாரிக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(ஆ) வன முகாமைத்துத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு உறப்பட்ட செலவினமொன்றை தவறுதலாக ஆதனம், பொறியின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருப்பதுடன் இத்தவறு 2022 நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது சரிப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

(இ) இது அச்சுத் தவறின் காரணமாக ஏற்பட்டதாகும். நிலையான சொத்துக்களுக்கான பேரேட்டு மீதிகள் மற்றும் அச்சொத்துக்களுக்கான உப பட்டியல்களின் மீதி என்பவற்றுக்கிடையிலான வேபாடுகளைப் பரீட்சித்து 2022 நிதிக் கூற்றினைத் தயாரிக்கும் போது குறித்த தவறுகளை சரிசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள நுகரத்தக்க உயிரியல் சொத்துக்கள் மற்றும் தாங்கி உயிரியல் சொத்துக்கள் என்பவற்றின் பெறுமதி உருவாகி இருக்கும் முறையைப் பரீட்சித்து அச்சொத்துக்களை பௌதீக

ரீதியில் இனங்காண்பதற்கு கள ரீதியிலான பரீட்சித்தல்களை மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ளதாக அறித்தருகின்றோம்.

(உ) 2019.12.31 ஆம் திகதியில் கடன்பட்டோர் சம்பந்தமான மீதிகளை உறுதிப்படுத்தி அனுப்புமாறு அனைத்து கடன்படுநர்களுக்கும் அறிவிக்கப்பட்டதுடன், அதற்கான பதில்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதால் நிறுவனத்தின் பேரேட்டு மீதி சரியானது என கருதி நிதிக்கூற்று தயாரிக்கப்பட்டது.

(ஊ) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கடன்பட்டோர் மீதி ரூபா. 86,511,769 தொடர்பான விபரங்கள் கீழே உள்ளன.

	ரூபா.
முற்பணம் -Opalgalla	4,480,000
Poly chemix	715,389
Brokers LCBL/CTB	16,030,780
கிடைத்த முற்பணம் Green Leaf Buyers	11,576,571
State Resource Management Corporation	28,709,029
Lanka Mineral Sand கடன்	25,000,000
மொத்தம்	**86,511,769**

அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கடன்கொடுத்தோர் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தேயிலை தரகர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் / முற்பணம் ரூபா. 16,030,780.00 தேயிலை நாற்றுக் கொள்வனவாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட முற்பணங்கள் ரூபா. 11,756,571 மற்றும் Lanka Mineral Sand நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை உள்ளடக்கும் கடன் மீதி சம்பந்தமான விளக்கம் கீழே காட்டப்பட்டுள்ளது.

தேயிலை தரகர்களினால் பெற்றுக்கொண்ட கடன் மற்றும் முற்பணங்கள் ரூபா. 16,030,780.00

தேயிலை தரகர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா. 16,030,780.00 தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	ரூபா.
Ceylon Tea Brokers PLC	62,731.11
Mercantile Produce Brokers (Pvt.) Ltd.	3,361,735.93
Forbs & Wolker Tea Brokers	6,183,715.99
Lanka Comodity Brokers Ltd.	6,422,595.79
மொத்தம்	**16,030,779.82**

மேற்குறிப்பிட்ட தேயிலைத் தரகர்களுடன் இப்போதும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதுடன் 2019.12.31 **ஆம் திகதியில் இருந்த மேற்குறிப்பிட்ட மீதிகள்** 2020 **வருடத்திற்குள் தீர்க்கப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ள தேயிலை தரகர்களுக்கு கூட்டுத்தாபனத்தின் பேரேட்டுக் கணக்குப் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்புகள் இல.** 01,02,03 **மற்றும்** 04)

தேயிலைக் கொழுந்துகளை கொள்வனவு செய்வோரிடமிருந்து பெற்றுள்ள முற்பணம் ரூபா. 11,756,571.00

பச்சைக் கொழுந்துகளை கொள்வனவு செய்வோரிடமிருந்து பெற்றுள்ள ரூபா. 11,576,571 தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

	ரூபா.
Abbotsleigh தோட்டம்	2,823,996.00
Carolina தோட்டம்	1,086,015.40
Getagahawela Tea Factory	337,883.00
Strathdon தோட்டம்	4,264,036.20
Walters Bay Tea Factory (Pvt.) Ltd	3,244,640.67
மொத்தம்	**11,756,671.27**

மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள Getagahawela Tea Factory இன் குறிப்பிட்டுள்ள ரூபா. 337,883.00 பெறுமதியான மீதி 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்கொணரப்பட்ட தொகையாக இருப்பதுடன், அத்தொகை இது வரையில் தீர்க்கப்படாதுள்ளது. அவ்வாறே, Walters Bay Tea Factory (Pvt.) Ltd இன் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபா. 3,244,640.67 பெறுமதியான மீதி 2015 ஆம் வருடத்திலிருந்து முன்கொணரப்பட்ட மீதியாக இருப்பதுடன் அதுவும் இது வரையில் தீர்க்கப்படாதுள்ளது. இந்த அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஏனைய மீதிகள் 2020 ஆம் ஆண்டினுள் தீர்க்கப்பட்டுள்ளன. மேலும், Lanka Minaral Sand நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்டுள்ள ரூபா. 25 பெறுமதியான கடனுக்காக 2019.12.31 ஆம் திகதிக்குரிய மீதியினை உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 10).

எஞ்சியுள்ள அனைத்து கடன்படுநர் மீதிகளும் 2016 மற்றும் அதற்கு முந்திய வருடங்களிலிருந்து முன்கொணரப்பட்டவையாகும். அந்த மீதிகள் இது வரையில் தீர்க்கப்படவில்லை. அனைத்து கடன்கொடுநர்கள் மற்றும் கடன்படுநர்களுக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தாலும் அவற்றுக்கான பதில்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதால் நிறுவனத்தின் பேரேட்டு மீதி சரியானதென கருதி நிதிக்கூற்று தயார்செய்யப்பட்டுள்ளது. 2021 நிதிக் கூற்றினுள் உள்ளடக்கியுள்ள கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகளுக்கு பின்னரான மீதிகளை தீர்ப்பனவு செய்வது தொடர்பான விபரங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கக்கூடிய விதத்தில் நிதிக்கூற்று தயாரிக்கப்படுகின்றது.

(எ) இந்த நிலுவைகள் 2012 ஆம் நிதியாண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டவை என்பதால் அப்பெறுமதிகள் தொடர்பான விபரங்களை 2022 நிதிக் கூற்றில் வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

(ஏ) நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கியுள்ள ரூபா. 1,933,043 பெறுமதியான செயலற்ற கணக்கு மீதி 2012 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன்கொணரப்பட்ட மீதிகளாக இருப்பதனால் இது தொடர்பாக பரீட்சித்து உரிய கணக்கு சீராக்கல்கள் 2022 நிதிக் கூற்றில் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஐ) நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள மீண்டும் செலுத்த வேண்டிய ரூபா. 6,379,370 பெறுமதியான விலைமனுக்கோரல் வைப்புப் பணம் 2006 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்திலிருந்து முன்கொணரப்பட்டுள்ள மீதியாகும். இப்பணம் எந்த விலைமனுக் கோரலுக்கு யாரால் எத்திகதியில் வைப்பு செய்யப்பட்டுள்ளதென்பது தொடர்பான விபரங்கள் நிறுவனத்தில் இல்லை. தற்போது இந்நிலுவைகளை ஏடுகளிலிருந்து பதிவழிப்பு செய்வதற்காக பணிப்பாளர் சபைக்கு 2021.01.25 ஆம் திகதிய பணிப்பாளர் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு 2021 திசம்பர் மாதம் நடந்த கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக ஒரு குழுவினை நியமித்துக்கொள்ளுமாறு ஆலோசனை கிடைத்துள்ளதனால் அதற்கேற்ப செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. வேறு சட்ட மற்றும் கண்காணிப்புத் தேவைகள் பற்றிய அறிக்கை

2.1.1 கூட்டுத்தாபனம் 2019 ஆம் ஆண்டுக்குரிய நிதியறிக்கையை முறையாகப் பேணிவருகின்றது.

2.2.2 சட்டவிதிகள் / கட்டளைகள் தொடர்பான குறிப்பீடுகள்

(அ) கூட்டுத்தாபனத்திற்குரிய அனைத்து வாகனங்களையும் இனங்காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு இயந்திரப் பொறியியலாளர் ஒருவரின் பங்கேற்புடனான குழுவின் உதவியுடன் பாவனையிலிருந்து அகற்றுவதற்கான வாகனங்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அவ்வாறு இனங்கண்டு, மதிப்பீட்டு நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்த பின்பு குறித்த சுற்றுநிருபங்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வாகனங்களை பாவனையிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படாத இயந்திரங்களை இனங்காணும் செயற்பாட்டினை 2022 வருடத்தினுள் துவங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(இ, ஈ, உ, ஊ, எ)

நிறுவனம் நீண்டகாலமாக நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதன் காரணமாக நிறுவனத்தினால் தேசிய இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய வரிகள் தொடர்பாக கவனம் செலுத்தவில்லை. எனவே, இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு அறிவித்து கிடைக்கும் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் வணிக நடவடிக்கைகள் கடந்தகாலத்தைப் போன்று தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே, அதனைக் கருத்திற்கொண்டு 2022 ஆம் ஆண்டுக்கு வணிகத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கையை மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பு நிறைவுசெய்து குறித்த வணிகத் திட்டத்தை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்று அதன் ஒரு பிரதியை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(ஐ)

I. நிறுவனத்தின் பிரதான தொழிற்பாட்டுப் பிரிவான பெருந்தோட்டப் பிரிவுக்கு அனைத்து வருடங்களுக்குமான செயல்படுத்தற் திட்டம் தயாரிக்கப்படுவதோடு அதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதன் பிரகாரம், பெருந்தோட்டப் பிரிவின் 2022 ஆம் நிதியாண்டுக்கான செயல்படுத்தற் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு அது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் அனைத்துப் பிரிவுகளும் தழுவப்படும் விதத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான செயற்படுத்தற் திட்டங்களைத் தயாரிக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அச்செயற்பாடுகளை மே மாதம் 31 ஆம் திகக்கு முன்பு பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பின்னர், குறித்த செயற்படுத்தற் திட்டங்கள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட பிறகு அதன் ஒரு பிரதியை கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

II. நிறுவனத்தின் பிரதான தொழிற்பாட்டுப் பிரிவான பெருந்தோட்டப் பிரிவுக்கு மாத்திரம் முன்னேற்ற அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் விதத்தில் 2022 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்த பிறகு குறித்த திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பாக அறிக்கைகளைத் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றேன்.

III. 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்ட ஆவணங்களைத் தயாரித்து உரியவாறு பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பித்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

IV. 2020 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்று உரிய திகதியிலேயே கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டுக்குரிய நிதிக் கூற்று 2022.02.25 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஒ) 2019 ஆம் ஆண்டுக்கான இடைக்கால பணிமுற்பணத் தீர்ப்பனவுகள் தாமதமடைந்துள்ளன. என்றாலும், 2022 ஆம் ஆண்டிலிருந்து அத்தகயை தாமதங்களை குறைப்பதற்கு முடியுமாக இருக்கும்.

(ஓ) ஓபல்கலை தோட்டத்திலிருந்து 01 ரூட் 39.07 பர்ச்சஸ் நிலப்பரப்பு டயலொக் ப்ரோன்ட்பேன்ட் தனியார் கம்பனிக்கு 30 வருடங்களுக்கு குத்தகை விடப்பட்டுள்ளது. அந்நிறுவனத்துடன் கைச்சாத்திட்டுள்ள குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அடிப்படை வருடாந்த குத்தகைப் பணம் ரூபா. 240,000.00 ஆக இருப்பதுடன் வீதி பராமரிப்புக்கான வருடாந்த செலவினம் ரூபா. 72,000.00 ஆகும். 1995 ஜூலை 25 ஆம் திகதி சனாதிபதி செயலத்தினால் வெளியட்டுள்ள எஸ்ஏஅய் /ஏ 01/ 34 ஆம் இலக்க அரச காணிகளை உரிமை மாற்றம் செய்தல் மற்றும் குத்தகை உடன்படிக்கை நிபந்தனைகள் தொடர்பான வழிகாட்டற்கோவையின் பிரகாரம் 5 வருடங்களுக்கு ஒரு முறை அப்பணத்தினை 50% இனால் அதிகரிக்க வேண்டும். அதன் பிரகாரம் ஒவ்வொரு காலப்பிரிவிலும் அறவிட்டுள்ள பணம் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

கால எல்லை	வருடாந்த குத்தகை வாடகை ரூபா. சதம்	வீதி பராமரிப்புச் செலவு ரூபா. சதம்
2000.01.01-2004.12.31	240,000.00	72,000.00
2005.01.01-2009.12.31	360,000.00	108,000.00
2010.01.01-2014.12.31	540,000.00	162,000.00
2015.01.01-2019.12.31	810,000.00	243,000.00
2020.01.01-2024.12.31	1,215,000.00	364,500.00

குறிப்பு : 2022 ஆம் வருடத்திற்குரிய பணம் தற்போது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்திற்குரித்தான கம்மடுவை தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.87 பர்ச்சஸ் காணியும் ஹுன்னஸ்கிரிய தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.01 பர்ச்சஸ் காணியும் சுயாதின தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 1996 ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டதுடன், அது தொடர்பாக குத்தகை உடன்படிக்கை ஏதும் கைச்சாத்தாகி இருக்கவில்லை. எனவே, உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு குறித்த நிறுவனத்தின் உடன்பாட்டினை கோரி 2020.12.23 மற்றும் 2021.11.22 திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு இது வரையில் குறித்த நிறுவனத்திலிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. ஆதலால், பெருந்தோட்ட அமைச்சின் உதவியுடன் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சுயாதீனத் தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அனுப்பியுள்ள கடிதங்களின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்புகள் இல. 18 மற்றும் 19)

(ஔ) நிறுவனத்தின் MM வகைக்குரிய அனைத்து உத்தியோகத்தர்களின் போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவுகள் அனைத்தும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

(க) வரைபில் குறிப்பிட்டிருப்பது போன்று நிறுவனத்தின் தலைவரினால் பெற்றுக்கொண்டுள்ள மேலதிக எரிபொருளுக்குரிய அனுமதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ச)(ட) நிறுவனத்தின் நீண்டகால நிதி நெருக்கடிகளின் காரணமாக ஊழியர் சேமலாப நிதியக்கொடை, ஊழியர் நம்பிக்கை நிதியக்கொடை மற்றும் பணிக்கொடைகள் உரியவாறு செலுத்தப்படாமையினால் இவ்வாறான மிகை விதிப்புக் கொடுப்பனவினை செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலுவையை செலுத்துவதற்கு

திறைசேரியிலிருந்து நிதி கிடைத்த பின்னர் குறித்த கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகிறேன்.

2.2.3 இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிப்பது தொடர்பான 1958 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அதிகாரம் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க நிறுவனத்தின் நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

2.2.4

(அ) நிறுவனம் பல வருடங்களாக நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதன் காரணமாக அடுத்த 03 வருடங்களுக்கான பெறுகைத் திட்டத்தினை தயார்செய்ய முடியாதுள்ளது.

(ஆ) 2019 வருடத்தில், அப்போதைய தலைவருக்காக வாகனமொன்று வாடகைக்கு அமர்த்தும் போது விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், அதற்கேற்ப பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த வழங்குநர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். என்றாலும், குறித்த பெறுகை ஆவணங்கள் உரிய முறையில் பேணப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

(இ) 2019 ஆம் ஆண்டில் தோட்டங்களுக்கு களைகொல்லி இரசாயன உரம் 120 லீற்றரைக் கொள்வனவு செய்வதற்காக 03 நிறுவனங்களிலிருந்து விலைமனு கோரப்பட்டதோடு ஹெலீஸ் நிறுவனத்தினால் மாத்திரம் விலைமனு வழங்கப்பட்டது. அடுத்த இரண்டு நிறுவனங்களும் தம்மிடம் இருப்பில் இல்லை என அறிவித்திருந்தன. ஹெலீஸ் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலையான ரூபா. 207,000 வினை சாதாரண சந்தை விலைகளுடன் ஒப்பிட்டு நோக்கி வழங்குநர் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் அது தொடர்பான விபரங்கள் கோவைகளில் இல்லாமை ஒரு குறைபாடு என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

(ஈ) இந்நிகழ்வு தொடர்பாக உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து விளக்கம் கோரப்பட்டுள்ளதுடன், அது சம்பந்தமாக குறித்த உத்தியோகத்தர்களின் பதில்களின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளின் படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றோம்.

(உ) 2019 வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் நிலையான சொத்துக்களை மதிப்பீடு செய்வது தொடர்பான அடிப்படை பெறுகை நடவடிக்கைகளில் குறைபாடு நிகழ்ந்துள்ளதாக ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும், தேவையான நிதிகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட பிரச்சினையால் இச்செயற்பாடு இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

(ஊ) 2019 ஆம் ஆண்டில் களுத்துறை மாவட்டத்தின் நிவ்சட்ல் தோட்டத்தின் 83 ஏக்கர் நிலப்பரப்பின் நிலஅளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான பெறுகை நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலங்களில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாது உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம்.

(எ) 2019 ஆம் ஆண்டில் கோமரை தோட்டத்தின் நீர் வழங்கல் முறைமையை நவீனமயப்படுத்துவது சம்பந்தமான பெறுகை நடவடிக்கைகளில் குறைபாடுகள் இருப்பதை ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலங்களில் அவ்வாறான குறைபாடுகள் ஏற்படாது உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறியத்தருகின்றோம்.

1 ஏனைய கணக்காய்வு அவதானிப்புரைகள்

3.1 செயலாற்றுகை

(அ) பெருந்தோட்ட அமைச்சின் தரவுகளுக்கமைவாக 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் ஒரு ஹெக்டயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1595 கிலோ கிராமாக இருக்க வேண்டுமென வரைபு அறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், அந்த அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக 2019 இல் ஒரு ஹெக்டயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலையின் விளைச்சல் 1481.8 கிலோ கிராமாகும். அவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனத்திற்குரிய தோட்டங்களின் தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 174 – 727 கிலோ கிராமுக்கு இடைப்பட்டதாக இருந்ததாக நாம் ஏற்றுக்கொள்கின்றோம். பெருந்தோட்ட அமைச்சின் தரவுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டில் இலங்கையில் ஒரு ஹெக்டயருக்கான விளைச்சல் 1595 கிலோ கிராம் என வரைபில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக 2019 வருடத்தில் ஒரு ஹெக்டயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1481.08 என்பதை அறியத்தருகின்றோம். அவ்வாறிருப்பினும், 2019 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்திற்குரிய தோட்டங்களின் தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 174 – 727 கிலோ கிராமுக்கு இடைப்பட்டதாக இருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம்.. அந்த அமைச்சின் புள்ளிவிபரங்களுக்கு அமைவாக 2019 ஆம் ஆண்டில் ஒரு ஹெக்கடயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1481.8 என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். என்றாலும், 2019 இல் கூட்டுத்தாபனத்திற்குரிய தோட்டங்களின் தயாரிக்கப்படட தேயிலை விளைச்சல் 174 – 727 கிலோ கிராமுக்கு இடைப்பட்டதாக இருந்ததை ஏற்றுக்கொள்கின்றோம்.

(ஆ) வரைபு அறிக்கையின் படி 100 வருடங்களை விட தொன்மையான தேயிலைப் பயிர்ச்செய்கை 4086 ஹெக்டயர் நிலப்பரப்பில் இருப்பதாக குறிப்பிட்டிருந்தாலும் நிறுவனத்திலுள்ள எழுத்து மூலமான ஆவணங்களின் படி அது 2883.31 ஹெக்டயர் என்பதை அறியத்தருகின்றோம்.

நிறுவனம் முகங்கொடுக்கின்ற நிதிப் பிரச்சினைகளால் பழைய தேயிலைப் பயிர்ச்செய்கையை அகற்றிவிட்டு மீண்டும் புதிய பயிர்ச்செய்கைகளை ஆரம்பிக்க முடியாத நிலை உள்ளது. என்றாலும் 2022 ஆம் ஆண்டில் திறைசேரியின் நிதியுதவியுடன் 180 ஹெக்டயர் நிலப்பரப்பில் மீண்டும் தேயிலைப் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் அலகொல்ல, கல்பிஹில்ல, கோமரை, ஹுன்னஸ்கிரியை மற்றும் கெலேபொக்க தோட்டங்களின் கொழுந்து உற்பத்தி குறைந்துள்ளதை ஏற்றுக்கொள்கின்றோம்.

என்றாலும், 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த தேயிலை உற்பத்தியில் 11 சதவீதத்தினாலும், 2021 ஆம் ஆண்டில் 14 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

ஆண்டு	2018	2019	2020	2021
தேயிலை உற்பத்தி (கி.கி)	1,576,432	1,402,979	1,742,360	1,803,226

(ஈ) 2019 ஆம் ஆண்டு நிறைவடையும் போது வெளிப் பெருந்தோட்டக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த தேயிலை காணியின் பரப்பு 1391 ஹெக்டயராகும். 2018 ஆம் ஆண்டில் வெளிப் பெருந்தோட்டக்காரர்களின் தேயிலைக்

கொழுந்துக்கான தயாரிக்கப்பட்ட தேயிலையின் அளவு 102,507 கிலோ கிராமாக இருந்தாலும் 2019 ஆம் வருடத்தில் 99,850 கிரோ கிராம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

வெளிப் பெருந்தோட்டக்காரர்களுக்கு குறைந்த விளைச்சலுடன்கூடிய காணிகள் வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக உத்தேச தேயிலை விளைச்சலினைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களிப் படி ஒரு ஹெக்டயருக்கான தயாரிக்கப்பட்ட தேயிலை விளைச்சல் 1481.8 ஆகும்). என்றாலும், வெளிப் பெருந்தோட்டக்காரர்களின் தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பித்தி 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 இல் 54 சதவீத்தினாலும் 2021 இல் 66 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

ஆண்டு	***2018***	***2019***	***2020***	***2021***
தேயிலை உற்பத்தி (கி.கி)	*102,507*	*99,850*	*157,987*	*170,645*

(உ) வரைபு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தரவுகள் சரியானவை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

(ஊ) வரைபு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தரவுகள் சரியானவை என்பதை ஏற்றுக்கொள்கின்றோம்.

(எ) கூட்டுத்தாபனத்தின் 13 தோட்டங்களின் மொத்த நிலப்பரப்பு 11,132 ஹெக்டயர் ஆகும். அந்த மொத்த நிலப்பில் 4,223 ஹெக்டயர் பரப்பில் தேயிலைப் பயிர்ச்செய்கை இருப்பதுடன் ஏனைய பயிர்ச்செய்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பரப்பு 2,577 ஹெக்டயர் ஆகும். எஞ்சியுள்ள கிட்டத்தட்ட 4,332 ஹெக்டயருக்கு மேற்பட்ட பரப்பு நக்கிள்ஸ் பாதுகாக்கப்பட்ட வலயத்தினுள் இருப்பதுடன், மேலும், எஞ்சியுள்ள நிலப்பரப்பில் வீதி, கட்டிடங்கள் மற்றும் கற்பாறைகள் அமைந்துள்ளன.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் தேயிலைப் பயிர்ச்செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பரப்பு 4,223 ஹெக்டயராக இருப்பதுடன், பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி 2019 வருடத்திற்குரிய உத்தேச தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி ஹெக்டயருக்கு 1,481.8 கிலோ கிராம் ஆகும். அதன் பிரகாரம், 2019 ஆம் ஆண்டுக்குரிய உத்தேச தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி 6,257,641 கிலோ கிராமாக இருப்பதுடன் கூட்டுத்தாபனத்தின் உண்மை உற்பத்தி 1,402,979 கிலோ கிராம் ஆகும். அந்த அளவினை சதவீதமாக கருதும் போது உத்தேச உற்பத்தியில் 22.42 சதவீதமாகும்.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தேயிலை பயிர்செய்த நிலங்களின் நிலப்பரப்பு முறையே 4,189 மற்றும் 4,199 ஆகும். பெருந்தோட்ட அமைச்சின் புள்ளிவிபரங்களின் படி 2019 ஆம் ஆண்டுக்குரிய உத்தேச தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி 1481.8 கிலோ கிராமாக இருக்க வேண்டுமென்பதுடன், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் உத்தேச தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி முறையே 6,207,260 மற்றும் 6,222,078 ஆகும். மேலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் குறித்த தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தி முறையே 1,742,360 மற்றும் 1,803,226 கிலோ கிராம்களாகும். எனவே, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தின் மொத்த தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியினை உத்தேச தயாரிக்கப்பட்ட தேயிலை உற்பத்தியின் சதவீதமாக நோக்கும் போது அது 28.07% மற்றும் 28.98% அதிகரிப்பாகும்.

(ஐ) வரைபு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தரவுகள் சரியானவை என ஏற்றுக்கொள்கின்றோம்.

(ஒ) 2019 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டவாறு வருமானம் கிடைக்காமை காரணமாக போதியளவு உரத்தினைக் கொள்வனவு செய்ய முடியவில்லை.

(ஓ) நீண்ட காலமாக நிறுவனத்திற்கு போதியளவு வருமானம் கிடைக்காமை காரணமாக இத்தகைய நிலைமை உருவாகியது.

(ஒள) இலங்கை இறப்பர் பரிசோதனை நிலையத்தின் தரவுகளின் படி ஒரு ஹெக்டயருக்கான நியம இறப்பர் செடிகள் 516 ஆக இருக்க வேண்டுமென்பதுடன், வெற்றிகரமற்ற காட்டுச் செடிகளின் எண்ணிக்கையையும் கருத்திற்கொள்ளும் போது ஒரு ஹெக்டயர் பரப்பில் இருக்கும் இறப்பர் மரங்களின் எண்ணிக்கை 300 – 500 ஆகும். எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் நிதி நெருக்கடிகள் காரணமாக இறப்பர் பயிர்ச்செய்கையை உரிய முறையில் பரிபாலிக்க முடியாதிருந்ததனால் இறப்பர் உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

3.2 ஆளணி நிர்வாகம்

(அ) கூட்டுத்தாபனத்தின் மொத்த அங்கீகரித்த ஆளணியினுள் ஒவ்வொரு பதிவி வகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை (நிரந்தரம் அல்லது ஒப்பந்த அடிப்படையில்) விஞ்சாது ஆளணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஏதேனுமொரு பதவிக்காக நிரந்த உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்க்காது அப்பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கத் தேவைப்படுமிடத்து குறித்த உத்தியோகத்தரின் ஒப்பந்தக் காலத்தை முடிவுறுத்த முடியுமென்பதனால் அது கூட்டுத்தாபனத்திற்கு கூடுதலான பயன்களைப் பெற்றுத்தரக்கூடியதாக இருக்கும். அதற்கேற்ப, நிறுவனம் முகங்கொடுக்கின்ற நிதி நெருக்கடி காரணமாக வரையறுத்த ஆளணியினரைக் கொண்டு நிறுவனத்தின் நடவடிக்கைகளை தடைகளின்றி நடாத்திச் செல்ல முடியுமென என கருதுகின்றோம்.

(ஆ) முகாமை – நீதி எனும் பதவிக்கு 2022.01.03 ஆம் திகதி நிரந்தர அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டதுடன், பிரதி பொது முகாமையாளர் – பெருந்தோட்டம் எனும் பதவிக்கு 2021.01.06 ஆம் திகதி அப்போது கல்பிஹில்ல தோட்ட மேற்பார்வையாளராக இருந்த உத்தியோகத்தரை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி நியமிக்கப்பட்டது.

(இ) 2019 ஆம் ஆண்டில் அப்போதைய அமைச்சரினால் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டார். ஏனைய ஆட்சேர்ப்புக்கள் சேவை தேவை நிமித்தம் செய்யப்பட்டிருப்பதுடன் குறித்த ஆட்சேர்ப்புக்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

(ஈ) கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி வழங்கப்பட்டுள்ள நியமங்கள் தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

I. திரு. ஆர்.கே.எச்.அய் குலதர – முகாமைத்துவ உதவியாளர்.

குறித்த நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதோடு அவ்வுத்தியோகத்தர் வெறும் 03 நாட்கள் மற்றும் சேவை புரிந்ததன் பின்னர் பதவி விலகியுள்ளார். அந்த உத்தியோகத்தருக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை.

II. திரு. எஸ். ராஜரத்னம் – பொது முகாமையாளர்

குறித்த நியமனம் அப்போது விடயத்துக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரினால் நியமிக்கப்பட்டதோடு அந்த உத்தியோகத்தர் தற்போது குறித்த பதவியில் இல்லை.

III. ***திருமதி. எஸ்.எஸ் அநுராதநாயக – சட்ட உத்தியோகத்தர்.***

குறித்த உத்தியோகத்தர் தற்போது பதவியில் இல்லை.

IV. ***திரு. டிரான் யோகேஷ்டவரன் – தனிப்பட்ட ஓட்டுநர்***

பொது முகாமையாளரின் ஓட்டுநராக தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது இந்த ஓட்டுநர் பதவியில் இல்லை.

V. **திரு. ஆர்.ஜீ.என் சம்பத் – தொழிலாளர்**

VI. **திரு. ஆர் லோகநாதன் – தொழிலாளர்**

இந்நியமனம் ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதோடு 2009.09.18 ஆம் திகதியுடை 29/2019 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றுநிருபம் மற்றும் 2019.09.30 ஆம் திகதியுடைய EC/EDR/PRE/INQ ஆம் இலக்க தேர்தல் ஆணைக்குழுவின் சுற்றுநிருபம் என்பவற்றுக்கு அமைவாக உள்ளகக் கணக்காய்வின் பரிந்துரையின் அடிப்படையில் குறித்த உத்தியோகத்தரின் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. திரு. ஆர். லோகநாதன் என்பவர் தற்போது சேவையில் இல்லை.

VII. **திரு. ஜீ.கே.ஆர்.பீ கிரிஅல்ல – தோட்ட நிர்வாகி**

மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தரின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

2020 பெப்ரவரி 28 ஆம் திகதிக்குப் பிறகு நிறுவனத்தின் அனைத்து நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட வரைபானது ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளின் அடிப்படையில் 03 சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டது. அதன் பிரகாரம், திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையினை முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்திற்கு அனுப்புவதற்காக 2021.12.14 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் பெருந்தோட்ட அமைச்சுக்கு அனுப்பப்பட்டதுடன் அது பெருந்தோட்ட அமைச்சினால் 2022.01.28 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. அத்துடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் இந்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளை உள்ளடக்கிய வரைபு தொடர்பாக பல்வேறு கலந்துரையாடல்களை நடாத்தியுள்ளதுடன், அதற்கேற்ப ஆட்சேர்ப்பு முறைக்கு அங்கீகாரத்தினை வழங்குவதற்கான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் இடம்பெறுவதாக அறியத்தருகின்றோம்.

(ஊ) 2017 மே மாதமாகும் போது கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டியுள்ளதாக அறிக்கையிட்டதன் காரணமாக ஊழியர்களை ஊக்குவிக்கும் வகையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் வேதனேற்றம் வழங்கப்பட்டுள்ளது.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் மேலதிக வேதனேற்றங்கள் வழங்கப்படவில்லை என்பதுடன், தற்போது ஆளணியினரின் வேதனேற்றங்கள் முறையாக வழங்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(எ) தோட்டங்களின் சேவை தேவை நிமித்தம் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3.3 **முகாமைத்துவச் செயற்பாடுகள்**

(அ) 12 தோட்டங்களில் அனுமதியின்றி குடியிருக்கின்ற குடியிருப்பாளர்களுள் கோமரை அரச தோட்டத்தின் எம்.எச் சஹபந்துகே வய்லட்நோநா எனும் நபர் அனுபவித்துக்கொண்டிருந்த காணி மீண்டும் பொறுப்பேற்கப்பட்டுள்ளது.

வஹலந்துவை தோட்டத்தின் டீ.வீ தர்மசிரி எனும் நபர் அனுமதியின் குடியிருக்கும் காணி சம்பந்தமாக காலி சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கெதிராக உயர் நீதிமன்றத்தில் விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஏனைய அனைத்து தோட்டங்களிலிருந்து சட்டவிரோதமான குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்கு உரிய நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) நிறுவனத்தினால் குத்தகைக்கு விட்டுள்ள காணிகள் மற்றும் குறித்த குத்தகை உடன்படிக்கைகள் தொடர்பாக மீண்டும் பரீட்சிக்கப்படுவதுடன் அதன் பெறுபேறுகளுக்கேற்ப பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(இ) கூட்டுத்தாபனத்திற்குரித்தான கம்மடுவை தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.87 பர்ச்சஸ் காணியும் ஹுன்னஸ்கிரிய தோட்டத்திலிருந்து 2 ரூட் 2.01 பர்ச்சஸ் காணியும் சுயாதின தொலைக்காட்சி நிறுவனத்திற்கு 1996 ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டதுடன் அது தொடர்பாக குத்தகை உடன்படிக்கை ஏதும் கைச்சாத்தாகி இருக்கவில்லை. எனவே, உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு குறித்த நிறுவனத்தின் உடன்பாட்டினை கோரி 2020.12.23 மற்றும் 2021.11.22 திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதோடு இது வரையில் குறித்த நிறுவனத்திலிருந்து சாதகமான பதில்கள் கிடைக்கவில்லை. ஆதலால், பெருந்தோட்ட அமைச்சின் உதவியுடன் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாக அறியத்தருகின்றோம்.

(ஈ) நிறுவனத்தின் வாகனங்களில் பயணிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு பயணத்தின் முடிவில் பயணித்த உத்தியோகத்தரினால் வாகனத்தின் ஓட்டக் குறிப்பில் கைச்சாத்திடாத சந்தர்ப்பங்கள் இருப்பதன் காரணமாக அத்தகைய சந்தர்ப்பங்களை தவிர்ந்துகொள்ளுமாறு ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற அதிகமான வாகனங்கள் 35 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய வாகனங்கள் என்பதால் அவற்றின் மைலோமீற்றர் உரிய முறையில் இயங்குவதில்லை. எனவே, அத்தகைய வாகனங்களின் மைலோமீற்றரைத் திருத்தி எரிபொருள் பாவனையை சமப்படுத்துமாறு அனைத்து ஓட்டுநர்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், போக்குவரத்துப் பிரிவின் உத்தியோகத்தர் இவ்விடயம் உரிய முறையில் இடம்பெறுகின்றதா என்பதை மேற்பார்வை செய்கிறார் என்பதை அறியத்தருகின்றோம்.